21.7

# இந்திய மறுமலர்ச்சி

3590
3590

ஸ்ரீ அரவிந்தர்

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAR CHETTIAR
...
3590

தமிழ் நிலைய வெளியீடு

Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

திருவள்ளுவர் நூல் நிலையம்

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

# இந்திய மறுமலர்ச்சி

3590

✲

ஸ்ரீ அரவிந்தர்
எழுதியது

தமிழாக்கியவர் :
பி. கோதண்டராமன், எம். ஏ., பி. எல்.

✲

தமிழ் நிலையம்
நூல் வெளியீட்டாளர்
புதுக்கோட்டை

இந்திய மறுமலர்ச்சியின் உட்பொருள் என்ன? அதன் போக்குகளும் அடிப்படையான தத்துவங்களும் யாவை? அதனல் இந்நாடு மட்டுமன்றி மக்கட் குலமே அடையப் போகும் பயன் என்ன? ஆகிய இவற்றை ஸ்ரீ அரவிந்தர் 1918-ல் 'ஆரியா' என்னும் பத்திரிகையில் தொடர்ந்து எழுதிய நான்கு கட்டுரைகளில் அழகுற ஆராய்ந்தார். அவற்றின் மொழிபெயர்ப்பே இந்நூல். அன்பர்கள் ஆதரிப்பார்களாக.

முதல் பதிப்பு ஆகஸ்ட் 1944
உரிமை பதிவு செய்யப்பட்டது

சக்தி பிரஸ் லிமிடெட்
(சாந்தி பிரஸ்) சென்னை

3590

# முன்னுரை

'ரினேசான்ஸ்' **(Renaissance)** என்னும் ஆங்கிலச் சொல் தமிழில் புனர்ச்சனனம், மறுபிறப்பு, மறுமலர்ச்சி என மொழி பெயர்க்கப்படுகின்றது. உயிர் முற்றிலும் அவிந்து விடாமல் க்ஷீணதசை யடைந்து மீண்டும் உயிர்ப்பு அடைவதையே இச்சொல் குறிப்பதால், இதைப் புனர் உச்சீவனம் அல்லது புத்துயிர்ப்பு என மொழி பெயர்த்தலே தகும். ஆயினும், மறுமலர்ச்சி என்னும் சொல்லே பெரும்பாலும் வழங்கி வருவதால் அதையே இங்கு உபயோகிக்கிறேன்.

மொழி பெயர்ப்பாசிரியன்

# பொருளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| | பதிப்புரை | ... உ |
| | முன்னுரை | ... ௬ |
| 1. | இந்திய மறுமலர்ச்சியின் உட்பொருள் | ... 1 |
| 2. | மறுமலர்ச்சியின் மூன்று படிகள் | ... 31 |
| 3. | புது சிருஷ்டியின் ஆரம்ப நிலைகள் | ... 43 |
| 4. | மறுமலர்ச்சியின் அடிப்படை | ... 63 |

3590

# 1. இந்திய மறுமலர்ச்சியின் உட்பொருள்

## இந்திய மறுமலர்ச்சியின் சிறப்பு

பாரத நாட்டின் மறுமலர்ச்சியைப் பற்றிச் சிலர் சமீப காலந் தொட்டுப் பேசி வருகின்றனர். கவியும், நுண்மையான விமர்சகரும், சிந்தனையாளருமான ஜேம்ஸ் எச். கஸின்ஸ் என்பார் இப்போதுத் தலைப்பின் கீழ் பல சிறந்த கட்டுரைகள் வரைந்திருக்கிறார். வேறு சிலரும், புது வாழ்வையும் புதுச் சிந்தனையையும் நோக்கி முன்னேறிச் செல்லும் இவ்வியக்கத்தின் பல அம்சங்களை எடுத்துக் காட்டியுள்ளனர். ஆகவே, இவ்வியக்கத்தை இப் பெயரால் வருணிப்பது தகுதியுடையது என்றே கூறலாம்.

பாரத நாட்டில் இப்புத்துயிர்ப்பு உண்மையாகவே ஏற்பட்டிருப்பதாயின், இது இந் நாட்டுக்கு மட்டும் அன்றி உலக முழுமைக்குமே மிகவும் முக்கியமானதொரு விஷயமாகும். தொன்று தொட்டு இருந்துவரும் ஜீவ சக்தியையும் தேசீய லட்சியங்களையும் உயிர்ப்பிப்பது அல்லது உருமாற்றுவது என்னும் அருத்தத்தில் இது நாட்டிற்கு முக்கியமானதாகும். வேறு எல்லாவற்றினின்றும் பல விதங்களில் மாறுபட்டுள்ளதொரு ஜீவ சக்தியானது சோர்வு நீங்கிப் புதுப்பல மடைவதாலும், இதுவரையிலும் மக்களினத்தின் தற்காலக் கருத்தை ஆண்டுவரும் புத்திப் போக்குக்கும் உள்ள நோக்குக்கும் முற்றிலும் மாறான அதன் மேதை— இம் மேதை வருங்கால உலகில் ஆக்கம் பெறுவதற்கு ஆயத்தமாகி வரும் மேதையுடன் சற்றேறக்குறைய ஒத்திருக்கிறது—மீண்டும் வெளிப்படுவதாலும், எழக்கூடிய நிகழ்ச்சிகளினால் இது உலகுக்கே முக்கியமானதாகும்.

தற்சமயம் நான் முதற்குறித்த விஷயமாகவே பேசப் புகுகிறேன். ஏனெனில், பாரத நாட்டின் புது வாழ்வு மக்கட்கூட்டத்திற்கு எவ்விதம் பயன்படும் என்னும் விரிவான பிரச்னையை ஆராயுமுன், அது தனது சொந்த வாழ்வை எவ்விதம் வகுத்துக் கொள்ளப் போகிறது என்னும் பிரச்னையை ஆராய்வது இன்றியமையாததாகும். மேலும், சமீப காலத்தில் இதுவே அதி முக்கியமானதொரு விஷயமாக ஆதல் கூடும்.

## எத்தகைய மறுமலர்ச்சி?

பாரத நாட்டில் மறுமலர்ச்சி என்பது உண்மையாகவே ஏற்பட்டு வருகின்றதா என்பதே முதற்கேள்வி. மறுமலர்ச்சி என்பதற்கு நாம் என்ன பொருள் கூறுகிறோம் என்பதையே அது பெரும்பாலும் பொறுத்திருக்கிறது. மேலும், அது வருங்காலத்தைச் சார்ந்ததொரு விஷயமாக இருக்கின்றது. ஏனெனில், அது இன்னும் ஆரம்ப தசையிலேயே இருப்பதால் அது எங்கு கொண்டு போய் விடுமோ என்பதை உறுதியாய்க் கூறுவதற்கு இன்னும் காலம் வரவில்லை. ஐரோப்பியக் கலாசார வாழ்வில் ஏற்பட்ட பெருமாறுதல் அல்லது 'திரும்புமுனை'யை ஆதியில் குறித்த இச் சொல் நமது மனத்தை அக் கால நிலைக்கு ஈர்த்துச் செல்லுகின்றது. அம் மாறுதலை ஒரு விழிப்பு என்று மட்டும் சொல்லுவதற்கில்லை. கிறிஸ்தவ சமய நோக்கும், தியுதோனிய இனத்தவரின் கலாசாரமும், ஜமீன்—பண்ணைமுறையுமே மேலோங்கி, சர்வ வியாபகமாக இருந்த ஐரோப்பாவைப் பண்டைக் கிரேக்க—லத்தீன் நாகரிகத்தின் உயிர்ச்சக்தியும் உருவ அமைப்பும் தாக்கிக் குப்புறத் தள்ளி, வசப்படுத்தி, முக்கியமான, சிக்கலான விளைவுகள் சில அங்கே ஏற்படும்படிச் செய்தன எனக் கூறுவதே

பொருந்தும். அந்த ரீதியான மறுமலர்ச்சி பாரத நாட்டில் ஏற்படுவது சாத்தியமல்ல. சமீபத்தில் அயர்லாந்தில் நடை பெற்ற 'கெல்டிக்' இயக்கத்தையே இது ஒத்திருக்கிறது. அந் நாட்டில் விழிப்புற்ற சமுதாய உணர்ச்சியானது தன் னைப் புறத்தில் வெளிப்படுத்திக் கொள்ளுமாறு உந்தின ஒரு புது விசையைக் கண்டுபிடித்து, அவ் விசை உண்டுபண் ணின ஆத்ம சக்தியினால் புத்துயிரும் புது அமைப்பும் பெற முயன்றதே அவ் வியக்கமாகும். பல காலமாகத் திரை போன்று மூடிக்கொண்டிருந்த ஆங்கிலக் கலாசாரத்தை விலக்கி, கெல்டிக் சமுதாய உணர்ச்சியையும் கலாசாரத் தையும் உயிர்ப்பிப்பதன் மூலமாகவே இவ் விசை கண்டு பிடிக்கப்பட்டது. இந்தியாவில் அதே விதமான இயக்கம் தோன்றி, 1905-ல் ராஜீயக் கிளர்ச்சி நடந்தது முதல் அது ஒரு திடமான போக்கை அடைந்திருக்கின்றது. ஆனால் இந்த ஒற்றுமையுங்கூட இந்திய மறுமலர்ச்சியின் உண் மையைத் தெரிவிக்கக் கூடியதாக இல்லை.

### அன்னையின் பள்ளியெழுச்சி

மேலும், தற்சமயம், எல்லாமே ஒன்றையொன்று எதிர்த்து நிற்கும் சக்திகளைக் கொண்டதாயும், உருப் பெறாத ஒரே களேபரமாயும் இருப்பதைக் காண்கிறோம். ஆயினும், ஒரு புதிய தன்னுணர்ச்சி மேலெழுந்து இங்கு மங்கும் சில அமைப்புக்களில் பிரகாசிக்கின்றது. ஆனால், இந்த அமைப்புக்களுங்கூட பொதுவாக மக்களது மனத்தை இன்னும் போதுமான அளவு உறுதியாகப் பற் றிக் கொண்டிருப்பதாகச் சொல்ல முடியாது. இவை ஒரு முற்போக்கான இயக்கத்தைக் குறிக்கின்றன; முன்னணி யில் செல்வோரின் குரல்கள் போலவும், புதிதாக வழி

யமைத்துச் செல்வோரின் தீவர்த்தி வெளிச்சங்களைப் போலவுமே திகழ்கின்றன.

பொதுவாக, நாம் காண்பதெல்லாம், ஒரு புதிய உல இல், புதியதும் அன்னியமானதுமானதொரு சூழ் நிலையில் விழித்தெழுந்துள்ள ஒரு பூதாகாரமான சக்தியே. அவ ளுடைய அங்கங்களெல்லாம் சிறிதும் பெரிதுமான பல தளைகளால் கட்டுண்டிருக்கின்றன. அவைகளிற் சில, அவள் தானே போட்டுக்கொண்ட பழந்தளைகள்; சில சமீ பத்தில் அன்னியர்களால் போடப்பட்டவை. அவைகளி லிருந்து விடுதலையடைந்து எழுந்து தன்னை வெளிப் படுத்திக்கொள்ளவும், தனது ஜீவன் வியாபகமடையும் படிச் செய்யவும், உலகில் தனது அடையாளத்தைப் பொறிக்கவும் போராடிக் கொண்டிருக்கிறுள். ஒவ்வொரு பக்கத்திலும் தளைகள் உராய்ந்து தேய்வதின் ஒலியைக் கேட்கிறோம். இங்குமங்கும் 'டர்' ரெனக் கிழிவதையும், 'பட்' டென அறுபடுவதையும் காண்கிறோம். ஆனல், இன் னும் சுயேச்சையான இயக்கம் ஏற்படவில்லை; பார்வை இன்னும் தெளிவடையவில்லை; உள்ளத்தின் மொட்டு மாதிதான் மலர்ந்திருக்கிறது; பூதாகாரமான அன்னை இன்னும் எழுந்து நிற்கவில்லை.

### பாரத நாடு க்ஷீணதசை யடைந்தது உண்மையே

பாரத நாடு என்றுமே விழிப்புடன் இருந்துவரு வதாலும், அது மீண்டும் விழிப்படையத் தேவையில்லை யாதலாலும், மறு பிறப்பு அல்லது மறுமலர்ச்சி என்னும் சொல் இங்கு பொருந்துமா வென அறிஞர் கஸின்ஸ் கேட்கிறுர். இக் கேள்வியில் ஒரு உண்மை உண்டு. பாரத நாடு பண்டைக்கால முதல் இதுவரையிலும் யாதொரு

இடையீடுமின்றி வாழ்ந்து வந்திருப்பதைக் கண்டு வியப் படையும் திறந்த மனத்தையுடைய வெளியார் ஒரு வருக்கு இது ஒரு விசேஷமாகத் தென்படலாம். ஆனால், பாரத மக்களாகிய நாம் அவ்வண்ணம் கருத முடியாது. ஏனெனில், 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் உச்சநிலை யடைந்த க்ஷீண காலத்தினின்றும் விளைந்த துன்பங்களால் நாம் இன்னும் வருந்திக்கொண்டிருக்கிறோம். துரதிருஷ்ட வசமாக, மகத்தான உயிர்க்கனல் கொஞ்சகாலம் தணிய வும் சீரழியவும் ஆரம்பித்தது என்பதில் ஐயமே யில்லை. அச் சமயமே அரசியல் நிலைமையில் குழப்ப மேற்பட்டு, ஐரோப்பிய வியாபாரக் கூட்டத்தினரின் சாகசங்களுக்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. உள் வாழ்க்கையில், சமயத்திற் கும் கலைக்கும் உரிய சிருஷ்டிக்கும் சக்தியானது மேன் மேலும் மந்தமுற்றது. விஞ்ஞானம், தத்துவம், மன அறிவு, இவை வெகு காலத்திற்கு முன்னமேயே முற்றிலும் சீவ னற்று வெறும் பாண்டித்தியமாகச் சமைந்தன. இவை யெல்லாம் மேன்மேலும் க்ஷீணித்து வந்த சக்தியின் அந்திய காலத்தையும் அவ்வந்திய தசையிலிருந்து, இந்திய காலச் சக்கரத் தத்துவத்தின்படி, ஒரு புதுயுகம் பிறக்கவேண்டிய தாக இருந்ததையும் குறித்தன. அந்த நிலைமையினாலும், அதன் பின்னோடேயே மேலே இருந்து திணிக்கப்பட்ட ஐரோப்பியக் கலாசாரத்தின் நெருக்கத்தினாலும், மீண்டும் விழிப்புறுவது இன்றியமையாததாயிற்று.

இங்கே மூன்று விஷயங்களை நாம் ஆராய வேண்டிய தாக இருக்கிறது. முதலாவது, பண்டைப் பெருமைவாய்ந்த இந்தியக் கலாசார வாழ்க்கையானது தன்னைத் திருத்தி யமைத்துக் கொள்ளாமல் கொஞ்சகாலம் மழுங்கிச் சோம்பியிருந்தது. பின்னர், மேலை நாட்டுத் தொடர்பு ஏற்

பட்ட முதற்பருவத்தில் அது மெல்ல மெல்லச் சிதைந்து அழிவுறுவது நிச்சயமெனக் கொஞ்சநேரம் காணப்பட்டது. கடைசியாக, பத்து அல்லது இருபது வருடங்களுக்கு முன்னரே, முன்னேறிச் செல்லும் இயக்கமானது முதன் முதலாகக் கொஞ்சம் தெளிவுடன் வெளிப்படலாயிற்று.

**அழியாமல் காத்தது ஆத்ம சக்தியே !**

பாரத சமுதாயத்தின் பிராண சக்திகள் க்ஷீணித்து வந்த சமயத்திலுங்கூட இடைவிடாமல் தலை நிமிர்ந்து கொண்டு வருகின்ற ஆத்மீக வாழ்வின்மீதே அறிஞர் கஸின்ஸின் கண்ணும் கருத்தும் ஊன்றியிருக்கின்றன. விதி வசத்தினல் ஏற்பட்ட ஒவ்வொரு நெருக்கடியான நிலைமையிலும், அந்த ஆத்மீக வாழ்வே பாரத அன்னையை எப்போதும் உண்மையாகவே காப்பாற்றி வந்திருக்கிறது. அதுவே அவளது புத்துயிர்ப்பின் ஆரம்ப நிலையாயும் இருந்திருக்கின்றது. வேறெந்த சமுதாயமேனும் அதே மாதிரி நெருக்கப்பட்டிருந்தால், உடலோடு உயிருமாக அது வெகு காலத்திற்கு முன்பே அழிந்திருக்கும். அவ்வாறு நிகழவில்லையெனினும், அவளுடைய புற உறுப்புக்கள் நோயுற்று அழுகிக்கொண்டு வந்தது உண்மையே. தேக்கமடைந்த சக்திகள் புத்துயிரளிக்கும் சக்திகளைச் சிறிதுகாலம் தலையெடுக்க வொட்டாது தடுத்து விட்டன போலவே காணப்பட்டன. தேக்கம் எனில் மரணமே யன்றே? இப்போது விமோசனமும் விழிப்பும் ஏற்பட்டிருப்பதால், பாரதத் தாய் தனக்கு ஜீவாதாரமானதும் தனக்கே தனியானதுமான ஆத்ம சக்தியைக் காப்பாற்றிக் கொள்ளுவாள் என்பதில் ஐயமில்லை. ஆனல், உடலமைப்பில் பெருமாறுதல் ஏற்படக் கூடும். புது இளமை பெறும் அதே ஆத்மா தனக்கென ஒரு புது உடலையும், தத்துவம், கலை, இலக்கியம் கலா

சாரம், அரசியல், சமூகம் ஆகியவைகளுக்குப் புது உருவங்களையும் வகுத்துக் கொள்வதே இந்திய மறு மலர்ச்சியின் தனிச்சிறப்பாக இருக்குமென்று நான் நினைக்கிறேன். பழைய உருவங்களின் மூலமாக விளங்கின வாழ்க்கை உண்மைகளுக்கு இவ்வுருவங்கள் நேர் விரோதமாக இராமல், அதே உண்மைகளைக் குற்றங் களைந்து, பூர்த்தி செய்து புது முறையில் அமைத்து வெளியிடுவனவாகவே இருக்கும்.

### பாரத ஜீவனைப் பற்றிய தவறான அபிப்பிராயம்

பாரத நாட்டுக்கே தனியாயுள்ள பழமையான ஜீவ சக்திதான் என்ன? ஐரோப்பிய எழுத்தாளர்கள் பாரத நாட்டின் புத்திக்குப் பொதுவாயுள்ள தத்துவ விசாரப் போக்கையும், அதன் ஆழ்ந்த சமய உணர்ச்சிகள், சமய நாட்டம், பரலோக சிந்தனை முதலியவைகளையும் கண்டு வியந்து, இவையே பாரத ஜீவ சக்தியின் முழுமையும் எனக்கொண்டு நூல்கள் எழுத ஆரம்பித்து விடுகின்றனர். அகண்ட உணர்வில் அழுந்தியிருப்பது; விஷயத் தொடர் பற்றது; தத்துவ, சமயப் போக்குடையது; வாழ்க்கைக்குப் பொருத்தமற்றது; கனவு காணும் இயல்புடையது; உலகானுபவ மற்றது; வாழ்க்கையும் வினையும் மாயை யெனக் கொண்டு அவைகளினின்று விலகி நிற்பது – இத்தகைய மனப்போக்குடையது பாரத நாடு என அவர்கள் கூறினர். மற்ற விஷயங்களிற் போலவே இவ்விஷயத்திலும், இந்திய மக்கள் சிறிது காலம் தங்கள் புதிய மேல்நாட்டு ஆசிரியர்களும் எசமானர்களும் சொன்னதையே தாழ்மையுடன் திரும்பிச் சொல்லினர். தங்கள் தத்துவ ஞானம் இலக்கியம் சமயம் ஆகியவைகளைப் பற்றிப் பெருமையுடன் பேசக் கற்றுக்கொண்டனராயினும், இதர விஷயங்களில்

எல்லாம் அவர்கள் மாணவர்களைப் போலவே பாடம் கற்ப திலும் நகல் செய்வதிலும் திருப்தியடைந்தனர்.

அதற்குப் பின், அற்புத சக்தியும் சௌந்தரியமும் உள்ள இந்தியக் கலையொன்று இருப்பதை ஐரோப்பா கண்டுபிடித்தது. ஆனால், இந்தியாவின் இதர செல்வங்கள் அதன் கண்ணுக்குத் தென்படவேயில்லை. இதற்குள், பாரத புத்தி தன்னை விடுவித்துக்கொள்ளவும், தன்னைத் தானே பகுத்தறியும் தெள்ளிய நோக்குடன் தன் பண்டைக் கால விஷயங்களை ஆராயவும் ஆரம்பித்தது. தன்னைப்பற்றி தான் கொண்ட நோக்கு முற்றிலும் தவறானது என அது வெகு சீக்கிரத்திலேயே உணர்ந்தது.

மேலே சொன்னவை போன்ற ஒருதலைப்பட்சமான மதிப்புகள் எல்லாமே அநேகமாகப் பொய்த்துவிடுகின்றன. ஒரு காலத்தில் ஜர்மனியைப்பற்றி ஒரு தவறான கருத்து இருந்துவந்தது. அது தத்துவஞானத்திலும் சங்கீதத்திலும் பெருமை வாய்ந்திருந்தும், வாழ்க்கையில் தடுமாறித் தனக் கிருந்த மூலப்பொருள்களைத் தக்கபடிப் பயன்படுத்திக் கொள்ளத் திறமையற்றிருந்ததால், அந்நாட்டு மக்கள் பிழைக்கும் வகை யறியாதவர்களென்றும், கனவு காண் போர் என்றும், வெறும் புத்தகப் பாண்டித்யம் உடைய வர்களென்றும், உணர்ச்சிகளில் திளைப்பவர்களென்றும், பொறுமை அடக்கம் உழைப்பு ஆகிய இவை இருப்பினும் அரசியல் விஷயங்களில் திறமையற்றவர்களென்றும், 'ஜர் மனி மெச்சத் தக்கதாயினும், பரிகாசத்திற்குரியது' என் றும் கூறவில்லையா? அவ்விதத் தவறான அபிப்பிராயத்தி லிருந்து ஐரோப்பா பயங்கரத்துடன் விழிப்படைய வேண்டியதாக இருந்தது. பாரதநாடு பூரண மறுமலர்ச்சி

யடைந்தபின் ஐரோப்பா விழிப்புற நேரிடும். அவ் விழிப்பு ஜர்மனி விஷயமாக ஏற்பட்டதைப்போலக் குரூரமாக இராது. ஆனால், பாரத ஜீவனின் உண்மையான இயல்பையும் திறமையையும் பற்றி அது அடையும் விழிப்பானது அதைத் திடுக்கிடச்செய்யும் என்பது திண்ணம்.

3590

## பாரத புத்தியும் ஆத்மஞானமும்

பாரத நாட்டுப் புத்தியை அறிந்துகொள்ளுவதற்கு அதன் ஆத்மஞானமே தலையாய திறவுகோல். அதற்கு அகண்ட உணர்வு இயல்பாகவே உண்டு. வாழ்க்கையைப் புறத்தோற்றங்களின் ஒளியினால் மட்டும் சரிவரப் பார்க்க முடியாது என்பதையும், அவைகளின் சக்தியினால்மட்டும் சம்பூர்ணமாக வாழ முடியாது என்பதையும் ஆதியிலிருந்தே பாரதத் தாய் கண்டாள். கலப்பற்ற மதியூகத்தைப் போற்றிவந்த காலத்திலும், அஞ்ஞானம் மேன்மேலும் வளர்ந்துவந்த காலத்திலுங்கூட, இந்த நுண்ணறிவை அவள் கைவிடவில்லை. ஜட சம்பந்தமான விதிகள், சக்திகள், இவைகளின் பெருமையை அவள் அறிந்திருந்தாள். பௌதிக சாத்திரங்களின் முக்கியத்தைக் கூர்ந்து அறிந்தாள். சாமான்ய வாழ்க்கைக்குரிய தொழில்களை ஒழுங்குபடுத்தும் விதத்தை அறிந்தாள். ஆனால், தூலப் பொருளானது தனக்கப்பாலுள்ள ஒன்றுடன் சரியான தொடர்பேற்படுத்திக்கொள்ளும்வரையில் அது நிறைவு பெறுகிறதில்லை என்பதையும் அவள் கண்டாள். மனிதனின் தற்கால அறிவுக்கு எளிதில் புலப்படுமாறு பிரபஞ்சத்தின் சிக்கலான விஷயங்களை விளக்க முடியாதென்றும், அவனுடைய மேலெழுந்தவாரியான பார்வையினால் அவற்றைப் பார்க்க முடியாதென்றும், பின்புறமாக இதர சக்திகள் இருக்கின்றனவென்றும்,

சாதாரணமாகத் தன்னையும் அறியாமல் அவனுக்குள் இதர சக்திகள் இருக்கின்றனவென்றும், தனது ஒருசிறு பகுதியைத்தான் அவன் உணருகிறுனென்றும், முடிவு உள்ளதை முடிவற்றது எப்போதும் சூழ்ந்திருப்பது போலவே, கோசரத்தை அகோசரமும், புலனுணர்ச்சிக் குட்பட்டவற்றை புலனுணர்ச்சிக்கு அதீதமாயுள்ளவை யும் என்றும் சூழ்ந்திருக்கின்றனவென்றும் அவள் கண் டாள். மேலும், தனக்கும் அப்பாலுள்ள ஒரு மேல் நிலையையும், தனக்கு இன்றுள்ளதைவிட ஆழ்ந்ததொரு நிறைவையும் அடையும் ஆற்றல் மனிதனுக்கு உண்டு என் பதையும் அவள் கண்டாள். (இவ்வுண்மைகளைச் சமீபத் திலே தான் ஐரோப்பா காண ஆரம்பித்திருக்கிறது. ஆயி னும், இவை இன்னமும் அதன் சாமான்னிய புத்திக்கு எட்டவில்லையென்றே தோன்றுகிறது.) மனிதனுக்கு அப் பால் பல தேவதைகளும், தேவதைகளுக்கப்பால் கடவுளும் கடவுளுக்கப்பால் அவரது சொல்லரிய அநந்தமும் இருப் பதை அவள் கண்டாள். நமது உயிருக்கப்பால் பல உயிர் வரிசைகள் இருப்பதையும், நமது தற்கால மனத்திற்கப் பால் பல மன வரிசைகள் இருப்பதையும், இவைகளுக் கெல்லாம் மேலே சேதனத்தின் சோதிகள் சொலிப்பதை யும் கண்டாள். மனிதன் தனது திடசித்தத்தையும் ஞானத்தையும் பயிற்சி செய்துகொண்டால், இவைகளில் அவன் அடைய முடியாதது யாதொன்றும் இல்லையென வும், இம் மன வரிசைகளை வென்று, சித்தாகி, ஒரு தெய்வமாகி, கடவுளுடன் ஐக்கியப்பட்டுச் சொல்லுக்கு எட்டாத பிரம்மமாக ஆக முடியும் என்றும் அவள் தனது அந்தர்ஞானத்தில் கண்டாள். அச்சமும், சிறுமையும் இல்லாதவளும், ஆத்மஞானம், மன அறிவு, அறநெறி, பிராணன் ஆகிய இவை சம்பந்தமான எவ்வேலையை

யும் தைரியமாகச் செய்வதில் சற்றும் பின்வாங்காதவளு மான அவள், தான் கண்டதை அமைதியுற்ற துணி வுடன் பறையறைந்தாள். தனது புத்தியைச் சிறப் பித்த தர்க்க ரீதியான அனுபவ சாத்தியத்தையும், சாத்திர ஞானத்தையும் ஒழுங்கான முறையையும் கொண்டு ஒரு வழியைக் கண்டுபிடிக்க ஆரம்பித்தாள். ஆதலால், அவ ளுடைய ஆத்மஞானமும், சைத்தியாத்மாவை நோக்கிச் செல்லும் அவளது தீவிரமான போக்கும், அகண்டத் துடன் போராடி அதை உடைமைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்னும் அவளது பேரவாவும், அழிக்க முடி யாத அவளது சமய உணர்ச்சியும், அவளது பாரமார்த்திக மும், அவளது யோகமும், அவளது கவனத்தை விடாது கவர்ந்து வந்த கலாஞானமும், அவளது தத்துவமும் — ஆகிய இவையெல்லாம் நீண்ட கால நுண்ணறிவினாலும் அனுபவத்தினாலும் அவளிடம் வேரூன்றியிருந்தன.

## வளமான வாழ்வும் சிருஷ்டிகளும்

அவளுடைய புத்தியெல்லாமும், முழு ஜீவனும் அம் மட்டோடு நின்றுவிடவில்லை; அவ்வண்ணம் நின்று விடவும் முடியாது. அற்புதக் கனவு ஒன்றில் யாதொரு ஆதாரமுமின்றி மலையுச்சிகள் மேகங்களிலிருந்து கிளம்பி விடலாம். ஆனால், இந்நிலவுலகில் மலையுச்சிகள் அதைப் போலக் கிளம்பிவிடுவதில்லை. அம்மாதிரியாகவே, ஆன்ம வாழ்க்கையும் இப் புவியில் வெறும் சூனியத்தில் செழிப்ப தில்லை. நாம் புராதன இந்தியாவை நோக்குங்கால், அவ ளது அபாரமான திறனும், வற்றாத பிராண சக்தியும், வாழ்க்கையில் ஆனந்தமும், கற்பனைக்கும் எட்டாத வளம் பொருந்திய சிருஷ்டியும், அடுத்தபடியாக, ஆச்சரியத்தை உண்டுபண்ணுகின்றன. குறைந்தது மூவாயிரம் வருஷங்

களாக — இன்னும் அதிகமாகவே இருக்கலாம் — குடியரசுகள், ராஜ்யங்கள், ஆதிபத்தியங்கள், தத்துவங்கள், சமயக் கோட்பாடுகள், நுண்கலைகள், கவிதைகள், நினைவுக்குறியாக எழுதப்பட்ட பலவிதக் கட்டடங்கள், அரண்மனைகள், கோயில்கள், பொதுக் கட்டிட முதலிய வேலைகள், சமூகங்கள், சங்கங்கள், சமயக் கூட்டங்கள், சட்ட திட்டங்கள், யோகமுறைகள், அரசியல், அரசாட்சி முறைகள், அத்தியாத்மக்கலைகள், லௌகீகக்கலைகள், வாணிபம், தொழில்கள், நுண்தொழில்கள், முடிவற்ற இவ் வரிசையின் ஒவ்வொரு பகுதியிலும் குறைவற்ற பல போக்குகள் ஆகிய இவைகளையெல்லாம் பெருவாரியாகவும் இடைவிடாமலும் அவள் சிருஷ்டித்துக்கொண்டு வந்திருக்கிறாள். சிருஷ்டிக்கச் சிருஷ்டிக்க அவள் திருப்தியடைவதேயில்லை; களைப்புறுவதுமில்லை. சற்று தங்கியிருப்பதற்கு இடம் தேவையென்றோ, சோம்பியிருக்கவும் சிருஷ்டிக்காமல் சும்மா இருக்கவும் பொழுது வேண்டியிருந்ததென்றோ, அவள் கவலைப்பட்டதாகக் காணோம். அவள் தன் எல்லைப்புறங்களைக் கடந்து வியாபிக்கிறாள். அவளுடைய கலங்கள் கடலைக் கடந்து, மிகுதியாயுள்ள அருஞ் செல்வங்களை ஜூடியா, எகிப்து, ரோம் முதலிய நாடுகளுக்கு எடுத்துச் செல்லுகின்றன. குடியேற்றங்கள் அவளுடைய கலைகளையும் இதிகாசங்களையும் சமயக்கோட்பாடுகளையும் கிழக்கிந்தியத் தீவுகளில் பரப்புகின்றன. மெசப்பத்தோமியா பாலைவனங்களில் அவளுடைய அடிச்சுவடுகள் காணப்படுகின்றன. அவளுடைய மதங்கள் சீனாவையும் ஜப்பானையும் வென்று, மேற்கே பாலஸ்தீனம், அலெக்சாண்டிரியா வரையில் பரவுகின்றன. உபநிடதங்களின் உருவகங்களும் பௌத்தர்களின் மொழிகளும், கிறிஸ்துவின் வாக்குகளில் எதிரொலிக்கின்றன. அவளது நிலத்

திலும் அவளுடைய கருமங்களிலும் அபரிமிதமான உயிர்ச் சக்தி நிறைந்திருக்கிறது. ஐரோப்பிய விமர்சகர்கள், அவளுடைய புராதனக் கட்டடச் சிற்பங்கள், சிலைகள் சித்திரங்கள் முதலானவைகளில், உள்ளடக்கமே இல்லையெனவும், செல்வங்கள் மிதமற்றுச் செலவழிக்கப்படுகின்றனவெனவும், காலியிடமே கிடையாதெனவும், ஒவ்வொரு பிளவையும் உலோகத்தைப்போட்டு மூடவும், துளி இடத்தையும் ஆக்கிரமித்து யதேஷ்டமாக நிரப்பிவிடவும் அவள் பிரயாசைப்படுகிருள் எனவும் புகார் கூறுகின்றனர். இது குற்றமோ, குற்றமில்லையோ, இது அவளுடைய நிறை வாழ்வினுடையவும், உள்ளேயுள்ள அநந்தத்தின் பெருக்கினுடையவும் இன்றியமையாத தேவையாகும். அநந்தம் அநந்தமாயிருப்பதால், அது ஒவ்வொரு அங்குல இடத்தையும், துடிதுடிக்கும் உயிராலும் சக்தியாலும் நிரப்பி விடுகிறது. அதைப்போல அவளும் தன் செல்வங்களை மித மிஞ்சிக் கொழிப்பது அவளுக்குத் தவிர்க்கமுடியாத இயல்பாய்விடுகிறது.

### வாழ்க்கை கலையாதல்

இவ் வுன்னதமான ஆத்மஞானமும், சக்தியின் இப் பெருவளமும் வாழ்க்கை, சிருஷ்டி இவைகளின் இன்பமும் மட்டுமே பண்டைப் பாரதத்தின் ஜீவன் எல்லாமாக இருந்துவிடவில்லை. இவை அலகில்லாத, தூய்மையான நீலவானின் கீழ், செறிந்து குழம்பிச் சோபிக்கும் வெப்பப் பிரதேசப் பயிர்ப்பச்சைகளைப் போல இருக்கவில்லை. இத் தகைய செல்வங்களைப் பார்த்து வழக்கப்படாத கண்களுக்கு, இடம் முழுமையும் உயிரின் நானாவித ரூபங்கள் குவிந்து கிடப்பதில் ஒரு குழப்பமும், தேவைக்கு அதீத

மான ஒரு ஒழுங்கற்ற அபரிமிதமும், அளவு, நிகர், நிதானம், திட்டம் ஆகியவை வேண்டுமென்றே இல்லைபோலவும் காணப்படுகின்றன. ஏனெனில், வறட்சியும் வளமும் திண்மையும் விவரமும், சக்தியும் நுண்மையும், கொள் கையில் பருமையும் விவரத்தில் விசித்திரமும் — இவை யெல் லாம் ஒருங்கே பொருந்திய ஒரு திட்பமான அறிவே புராதன இந்தியாவின் மூன்றாவது சக்தியாக இருந்தது. ஒழுங்கும் அமைப்புமே அதன் பிரதான எழுச்சியாக இருந்தன. ஆனால் அவ்வொழுங்கானது பொருள்களின் அந்தரங்க நியதியையும் உண்மையையும் நாடுவதை ஆதார மாகவும், அவற்றைக் கண்டிதமாகப் பயிலக் கூடும் என் பதை எப்போதுமே தனது நோக்காகவும் கொண்டு இலங் கியது. பாரத நாடு அறமும் சாத்திரமும் முதன்மை பெற்றுத் திகழும் நாடாக விளங்கிவருகின்றது. அது மனிதனுடைய கருமங்கள், பிரபஞ்சத்தினுடைய தொழிற் பாடுகள், இவை ஒவ்வொன்றினுடையவும் அந்தரங்க உண்மையையும் விதியையும் நியதியையும் தேடிக் கண்டு பிடிக்க முயன்றது. அவற்றைக் கண்டறிந்த பின், அவை களை வாழ்க்கை முறையிலும் அனுபவத்திலும் கொண்டு வருவதன் பொருட்டு, விரிவான வடிவத்தையும் நுணுக்க மான அமைப்பு விதியையும் உருப்படுத்த உழைத்தது. அது தன் முதற்பருவத்தில் சேதனத்தைக் கண்டுபிடித்துப் பொலிவுற்றது. இரண்டாம் பருவத்தில் தருமத்தைப் பூரணமாகக் கண்டு பிடித்தது; மூன்றாம் பருவத்தில் ஆதியில் பெரும்பாலும் சூத்திர வடிவில் அமைந்திருந்த சாத்திரத்தை விரிவாக விளக்கஞ் செய்தது. இவைகளில் யாதொன்றும் தனித்து நிற்கவில்லை; எப்போதும் மூன்று அம்சங்களுமே ஒருங்கே காணப்பட்டன.

## அறிவின் பெருக்கு

இந்த மூன்றுவது பருவத்தில் வாழ்வெல்லாமே மிக விரிவானதொரு சாத்திரமாகவும், ஒரு கலையாகவும் மிகுந்த சிரமத்துடன் பூர்த்தி செய்யப்பட்டது. அசோகனது காலம் முதல் மகம்மதியர் காலம் வரையில், புத்தியானது சிருஷ்டித்துப் பெருக்கின குவியல் மட்டும் உண்மையாகவே பிரமாண்டமாக இருக்கின்றது. சமீபத்தில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் வரலாறுகளைப் படித்தால், இது தெற்றென விளங்கலாகும். இவ் வாராய்ச்சிகள் இப்போது உள்ளவைகளின் ஒரு பகுதியையே குறிக்கின்றன வென்பதையும், இப்போது காணப்படுகிறவை அக்காலத்தில் எழுத்தில் குறிக்கப் பட்டிருந்தவைகளில் ஒரு சதாம்சமே யாகும் என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அச்சுசாதனம் கண்டுபிடிக்கப்பட்டு தற்கால விஞ்ஞான சாத்திரத்திற்குரிய சௌகரியங்கள் ஏற்படு முன், இத்தகைய அறிவின் உழைப்புக்கு இணையாகச் சொல்லக்கூடியது சரித்திரத்தில் ஒன்றுமே கிடையாது. ஆயினும், இவ் அறிவாராய்ச்சிக் குவியலும், சிருஷ்டியும், விசித்திரமான விவரங்களும், மேற்சொன்ன அனுகூலங்களின்றியும், நினைவைத் தவிர வேறு பிரமாணமின்றியும், பழுதாகக் கூடிய பனையோலையைத் தவிர வேறொரு உதவியின்றியும் செய்து முடிக்கப்பட்டனவாகும். இப் பிரமாண்டமான இலக்கியமெல்லாம், தத்துவம், வேத சாத்திரம், மதம், யோகம், தர்க்கம், அலங்காரம், இலக்கணம், மொழியுற்பத்தி சாத்திரம், காவியம், நாடகம், வைத்தியம், வான சாத்திரம், பூதபௌதிக சாத்திரங்கள் ஆகியவைகளைப்பற்றியன மட்டுமல்ல. இது வாழ்வு எல்லாவற்றையுமே—அரசியலையும், சமூகத்தையும், சித்திரம் முதற்கொண்டு நாட்டியம் வரையில் எல்லாக் கலைகளையும், அறுபத்திநான்கு உப

கலைகளையும், அக்காலத்தில் வாழ்வுக்கு உபயோகமாகவோ மனத்திற்கு இனிமை பயக்கக்கூடியவையாகவோ இருந்து, அது சமயம் தெரிந்திருந்த எல்லாவற்றையும், உதாரணமாக, குதிரை, யானை இவைகளை வளர்ப்பதும் பழக்குவதும் போன்ற உலகானுபவ விவரங்களையும், அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு சாத்திரமும் ஒரு கலையும், அதற்குரிய பரிபாஷைகளும், அதற்குரிய ஏராளமான இலக்கிய நூல்களும்—ஆகிய இவை எல்லாவற்றையுமே தழுவியிருந்தது. மிகப் பெரியதும் மிக முக்கியமானதுமான விஷயம் முதற் கொண்டு, மிகச் சிறிய சொற்பமான விஷயம் வரையிலும், ஒவ்வொன்றிலும், எல்லாவற்றையும் தழுவியதும், வளமானதும், விவரமானதும், பூரணமானதுமான அதே புத்தி செலுத்தப்பட்டது.

ஒரு பக்கம், எல்லாவற்றையும் அறிந்துகொள்ள வேண்டும் என்னும் ஒரு அடக்கமுடியாத அவாவும், ஜீவன் தன்னை ஒவ்வொரு விவரத்திலும் அறிந்து கொள்ள வேண்டும் என்னும் விருப்பமும் இருக்கின்றன. மற்றொரு பக்கம், அமைப்புத் திறமையும், கண்டிப்பான ஒழுங்குமுறையும், இசைவுடன் அமைந்த அறிவு, சரியான ஓசையின்பம், தாளலயப் பிரமாணங்கள், ஆகிய இவை பொலிய வாழ்க்கையை நடத்தவேண்டும் என்னும் மன விருப்பமும் காணப்படுகின்றன. இவ்வண்ணமாக, உள்ளுக்குள்ளே ஆழ்ந்திருந்து பிரதானமாக விளங்கும் ஆத்ம ஞானமும், வளம் மிகுந்த சீவனின் சிருஷ்டிக்கும் ஆற்றலும், வாழ்வின் இன்பமும், இவைகளுக்கிடையே, தீவிரமாகத் தொழில் புரியும் பகுத்தறிவும், அறநெறியும், அழகுணர்ச்சியும்—ஆகியவை ஒருங்கே யமைந்த ஒரு சக்தி வாய்ந்த, கூர்மையான, நேர்மையான மதியும்—இவை

யெல்லாம் புராதன இந்தியக் கலாசார வாழ்வில் ஒரு சமரசத்தை உண்டுபண்ணின.

## இந்திய ஆத்மஞானம் வாழ்வை மறுக்கவில்லை

வளம் பொருந்திய இந்த ஜீவசக்தியும், அறிவின் சம்பத்தும் இன்றி, தன் அத்தியாத்மப் போக்குகளில் மட்டுமே கவனஞ் செலுத்தி யிருக்குமாயின், பாரத நாடு தான் சாதித்துள்ளவைகளை யெல்லாம் ஒருநாளும் செய்து முடித்திருக்கவே முடியாது. குற்றுயிரும், அடங்கி யொடுங்கின அறிவுமுடைய ஒரு வறண்ட பூமியில், அத்தியாத்ம ஞானம் மேலோங்கி வளருமென நினைப்பது பெருந் தவறாகும். அப்படிப்பட்ட இடத்தில் வளரும் ஆத்மஞானம், நோய்ச்சலாயும், க்ஷயத்தினுல் பீடிக்கப்பட்டும், ஆபத்தான எதிர்த் தாக்கல்களுக்கு உட்படக்கூடியதாயும் இருக்கும். மக்கட்கூட்டம் செழுமையுடன் வாழ்ந்து, ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபடும்போதுதான், ஆத்மஞானமானது தனது உயர்வையும், ஆழத்தையும், பலவகைப்பட்ட நிலையான பலன்களையும் அடைகின்றது. தற்கால ஐரோப்பாவில் பல காலமாகப் பிராண சக்தி பொங்கி எழுந்தும், மனஅறிவு அபாரமாகத் தொழில் புரிந்தும் வந்த பின்னரே, ஆத்மஞானம் அங்கு உண்மையாகத் தலைகாட்ட வாரம்பித்திருக்கிறது. முன்பு அங்கு ஆத்மஞானமானது வாழ்வின் பிணியைத் தணிக்கும் ஓர் அற்ப வைத்தியனைப் போல இருந்தது. ஆனல், இப்பொழுது அது உண்மையாகவே வாழ்க்கையில் ஒரு விரிந்த தெளிவை உண்டுபண்ணக் கூடியதாக இருக்கிறது. இந்திய ஆத்ம சிந்தனையில், வாழ்வை மறுக்கும் பௌத்தக் கொள்கையும் மாயாவாதமும் இடம் பெற்றிருப்பதைக் கண்டு ஐரோப்பியர் மலைத்துவிடுகின்றனர். ஆனல், வாழ்வை மறுத்தலானது

அதன் தத்துவப் போக்கில் ஓர் அம்சமே என்பதையும், க்ஷீணமடைந்த காலத்தில்தான் அது மிதமற்ற உருக் கொண்ட தென்பதையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அது இந்தியப் புத்தியின் போக்கில் ஒரு நோக்கில் விளைந்த ஒரு சாமான்னியப் பயனைத் தவிர வேறன்று.

## பாரத புத்தியின் போக்கு

பாரத புத்தியின் எல்லாக் காரியங்களுக்குமே அப் போக்கு பொதுவானது. ஆத்மஞானம், மனஅறிவு, அற நெறி, பிராண சக்தி, இவைகளைப் போன்ற ஒவ்வொரு எழுச்சியையும், எழுச்சியின் ஒவ்வொரு பிரத்தியேக விரி வையும், அதனதன் இறுதியான எல்லைக்குத் தொடர்ந்து, அதனால் என்னென்ன சாதிக்க இயலுமோ அவைகளை யெல்லாம் கண்டுபிடிக்கும் ஒரு தூண்டுதலே அப் போக் காகும். ஒவ்வொரு பொருளிலும், அதன் முழு விவரங் களை மட்டுமன்றி, அதன் அகண்ட பரிபூரணம், ஆழ்ந்த ஆழம், உயர்ந்த உச்சி ஆகியவைகளையும் தேடிக் கண்டு பிடிப்பதே அதற்கு இயல்பாகவுள்ள நோக்கின் ஒரு அம்ச மாக இருந்தது. விஷயங்களை அதீத நுண்மையுடன் ஆராயாமற்போனால், அறிவுக்கும் சிந்தனைக்கும் அனுபவத் திற்கும் எதிரிடையாகச் சாதாரண மந்த புத்தி யோடு வரம்புகளை உடைத்தெறிய முடியாதென்பதை அது அறிந்திருந்தது. இவ்வண்ணம், தத்துவ விசாரணை தொடரும் ஒவ்வொரு விஷயத்தையும், ஆத்மானுபவத்தின் ஒவ்வொரு போக்கையும் அதனதன் கடைசி முனைக்குக் கொண்டுபோய் அக் கடைசி முனையிலிருந்து வாழ்க்கை முழுவதையும் நோக்கி, அந் நோக்கிலிருந்து எந்த உண் மையை அல்லது சக்தியைத் தான் பெறக்கூடும் என

ஆராய்கிறது. அது தெய்வ இயற்கை முழுவதையும் அறியவும், இயற்கைக்கு அப்பால் உள்ளதைத் தன்னு லியன்றவளவு மேல்நோக்கிப் பார்க்கவும், கடவுளுக்கும் அப்பாலிருக்கக் கூடியதைக் கண்டுபிடிக்கவும் முயன்றது. ஞான வழியில் நிரீச்வர வாதத்தைப் பிரசித்தப் படுத்துகை யில், அவ்வாதத்தின் திருஷ்டி செல்லக்கூடிய உச்சிக்கும் அதைத் தொடர்ந்து சென்றது. அறியவேண்டும் என் னும் பேரவாவினுல் ஒரு ஓரப் பார்வையுடன் லோகாயதத் திற்கு இடங்கொடுத்த போதிலும், பாரமார்த்திகம், நியா யம் அநியாயம் என்னும் நெறி வழி, இவை போன்றவைக் குச் சற்றும் விட்டுக் கொடுக்காமல் தைரியமாகவும், நிஷ் கபடமாகவும் அந்த லோகாயதத்தைப் பிரகடனம் செய்தது.

## இப் போக்கின் பலவகைகள்

எங்கும் இத்தகைய புத்திப் போக்கையே நாம் காண் கிரேம். மானிட அறிவின் தன்மூப்பின் உச்ச நிலையும், சுயேச்சை, ஆட்சி, உடைமை இவற்றின்பால் உள்ள வேட்கையும், தன்னலத் தியாகத்தின் சிகரம், ஆசிரயம், தாழ்மை, ஆத்ம நிவேதனம் ஆகியவைகளும் பாரத புத்தி யின் லட்சியங்களுள் அடங்கியுள்ளன. லௌகீக வாழ்க் கையில், சுகவாழ்வின் லட்சியமானது மிதமிஞ்சின ராஜ போகத்திலும், எளிமையின் லட்சியமானது அதீத வறட்சி யில் திருப்தியடைவதிலும் முடிவுற்றன. பாரதநாட்டின் அந்தர்ஞானமானது, தான் மிகவும் போற்றிவந்த கருத்துக் களாலும், வாழ்க்கையில் நிலைபெற்ற பழக்க வழக்கங்கள் முதலியவைகளாலும் மழுங்கிவிடாமல் தெளிவாகவும் தீர மாகவும் விளங்கியது. சமூக ஒழுங்குக்கு அடையாளமாக ஜாதிமுறையை நிலைநிறுத்த நேரிட்டபோதிலும், மானிட

ஆன்மாவும் மானிட மனதும் ஜாதி பேதத்திற்கு அப்பாற் பட்டன வென்பதை (ஜாதித் திமிர் மறக்கக்கூடுமாயினும்) அது மட்டும் முற்றிலும் மறக்கவேயில்லை. ஏனெனில் மிகத் தாழ்ந்த மனிதனிடத்திலும் அது பகவானைக் கண் டது. முதலில் பேதங்களை அது வற்புறுத்தியது என்பது உண்மைதான்; ஆயினும், அதை இறுதியில் எதிர்த்து மறுப்பதன் பொருட்டே அவ்விதம் செய்தது. அரசியல் விவகாரங்களினால் ஏற்பட்ட அவசியங்களினாலும், சந்தர்ப் பங்களினாலும், இறுதியாக அது ராஜரீக தத்துவத்தைப் பாராட்டவும், மன்னன் தெய்வாம்சம் எனக் கூறவும், மத்திய ஆட்சியிலிருந்து பிரிந்து செல்லும் போக்குக்கு மிகவும் அனுகூலமாக நின்ற புராதன நகரக் குடியரசு களையும், சுதந்திரமான கூட்டு அரசாங்கங்களையும் ஒழிக்க வும் நேரிட்டு அது ஜனநாயகத்தை வளர்க்கமுடியாமற் போயினும், அதற்கு ஜனநாயகக் கருத்து இல்லாமற் போய்விடவில்லை. அக் கருத்தைக் கிராமத்திலும் பஞ்சா யத்திலும், ஊராட்சியிலும், ஜாதிக்குள்ளும் செலுத்தி, மக்களிடம் தெய்வாம்சம் இருப்பதை அதுவே முதன் முதலாகப் பறைசாற்றியது. மேலும் அதிகார பலத்தின் உச்ச நிலையிலிருந்த மன்னனுக்கும், "ஓ! அரசனே! ஜனங்களின் தலைமை ஊழியனா யிருப்பதைத் தவிர நீ வேறென்ன?" என முழங்கும் நிலைமையிலும் அது இருந் தது. பொன்யுக விஷயமாக அது கொண்ட கருத்து ஒரு சுதந்திரமான அத்தியாத்ம அராஜகமே யாகும். அது நீண்டகாலமாகப் புலனெறி வாழ்க்கையிலும் அதன் இன் பங்களிலும் அமிழ்ந்து சென்றதையும், அவ்விஷய வாழ்க் கையின் சர்வ போகங்களையும் இந்திரிய அனுபவங்களின் ஆழங்களையும் தீவிரங்களையும் நாடியதையும் அதன் அதி தீவிர ஆத்ம ஞானமானது தடுக்க முடியவில்லை. ஆயினும்,

ஒன்றுக்கொன்று நேர் விரோதமான விஷயங்களை அடைவதற்குச் செய்த இம் முயற்சியானது எக்காலத்திலும் குழப்பத்தில் முடிவடையவில்லை என்பது குறிப்பிடத் தக்கதொரு விஷயமாகும். அதன் அதீத காம வாழ்க்கையில் காணப்படும் எதையும், ஐரோப்பாவில் அதே போக்கினால் பல தடவைகள் ஏற்பட்ட கட்டுக்கடங்காத துஷ்டப் பிரவர்த்தனையுடன் சிறிதும் ஒப்பிடமுடியாது. ஏனெனில், பாரத புத்தியானது ஆத்ம ஞானம், அறநெறி ஆகியவற்றுடன் தொடர்புற்றிருந்ததோடு அறிவும் அழகுணர்ச்சியும் பெற்றிருந்தது. அறிவின் நியமமும் அழகின் வண்ணமும் குழப்ப நிலைக்கு நேர்விரோதமாக இருப்பவை. ஒவ்வொரு அதீதப் போக்கிலும், பாரத ஜீவன் அந்த அதீதத்தில் ஒரு விதியையும், அதன் பிரயோகத்தில் ஒரு நியமம், அளவு, அமைப்பு ஆகியவற்றையும் நாடுகின்றது. மேலும், அதீதப்போக்குகளின் ஆழத்தைக் கண்டுபிடிக்கும் இந்த இயல்பிற்கு எதிர் நிறையாக, எல்லாவற்றையும் இணைத்துத் தொகுக்கும் ஒரு விசேஷ இயல்பு அதற்கு உண்டு. ஆகவே, ஒவ்வொரு எழுச்சியையும் அது சாதிக்கக்கூடிய கடைசி எல்லை வரையில் நெருக்கின பிறகு, இந்திய புத்தியானது தான் பெற்ற ஞானத்தை ஐக்கியப் படுத்துவதிலும், காரியத்திலும் சரி, அமைப்பிலும் சரி, ஒரு இசைவையும் நிறைவையும் ஏற்படுத்துவதிலும் இடைவிடாமல் முனைகிறது. நிறையையும் இசைவையும் (Rhythm) கிரேக்கர் தன்னடக்கத்தின் மூலமாக அடைந்தனர். பாரத நாடு, அறிவையும் அறநெறியையும் அழகுணர்ச்சியையும் முறைப்படுத்தும் தனது நுண்ணறிவின் மூலமாகவும் தனது புத்தியிலும் வாழ்விலும் காணப்படும்படியான எல்லாவற்றையும் இணைத்து ஒற்றுமைப்படுத்தும் தூண்டுதலின் மூலமாகவும் அவற்றை அடைந்தது.

## ஆத்மஞானமே எல்லாவற்றிற்கும் நாரகமாக விளங்கியது

கடந்த காலங்களில் மேன்மையுடன் விளங்கின பாரத புத்தியினுடையவும் பாரத ஜீவனுடையவும் சில அம்சங்களை மட்டும் காண்பவர்கள், மேற்சொன்ன விஷயங்களை அலட்சியம் செய்து ஆராயாமலே இருந்துவிடக்கூடும் என்பதற்காகவே நான் அவைகளைக் குறித்து விரிவாகக் கூறலானேன். அந்த அம்சங்களைமட்டும் வற்புறுத்துவதனால், பண்டைக்கால பாரத நாட்டையும் அதன் நாகரிகத்தின் முழு தாத்பரியத்தையும், அதற்கு உயிர் தந்த ஜீவ சக்தியையும் பற்றி அரைகுறையான அபிப்ராயத்தை நாம் பெறுவோம். தற்கால நிலையானது, பண்டைக்காலம் தான் க்ஷீணதசை யடைந்த சமயத்தில் நமக்குக் கடைசியாக விட்டுச்சென்ற ஒரு வைப்பேயாகும். அதுவே எதிர்காலத்தின் ஆரம்ப நிலையாக இருக்க வேண்டும் என்பதில் ஐயமே யில்லை. ஆனால், பாரத நாட்டில் பண்டைக் காலத்திலிருந்த எல்லாமே இந்நிகழ் காலத்தில் இன்னும் அடங்கி மறைந்திருக்கின்றன. அவை இன்னும் அழிந்துவிடவில்லை; புது வடிவம் தாங்கி மீண்டும் வருவதற்காக அவை காத்துக்கொண்டிருக்கின்றன. சிருஷ்டி சக்தியின் பிரவாகம் வற்ற ஆரம்பித்தபோது தான் க்ஷீணம் ஏற்பட்டது. அந்த சிருஷ்டி சக்தி சிறப்புற்றுப் பூரணப் பிரவாகமாகப் பாய்ந்ததைப் பார்த்திருந்தால்தான் அதை நாம் அறிய முடியும். அந்தப் பிரவாகம் திரும்பி வருவதே மறுமலர்ச்சியாகும். அது எடுத்துக் கொள்ளும் வடிவங்கள் புத்தப் புதியவையா யிருப்பினும், அவைகளுக்கு அதே ஜீவன்தான் உயிரளிப்பதாக இருக்கும். ஆகவே மறுமலர்ச்சி சாத்தியமாவது, அது தோற்றுவிக்கக்கூடிய சக்திகள், அதன் சிருஷ்டியின் விசாலம்—

இவைகளை எல்லாம் மதிப்பிட வேண்டுமாயின், பாரமார்த் திகத் தத்துவத்தில் பராக்காக இருந்துவிடுவது ஒன்றே அதன் போக்கென்றும், அதுவே இந்திய ஜீவனின் கதிக ளுக்கெல்லாம் (**Cadences**) தலைமையான உயிரளிக்கும் ஒரே ஜீவஸ்வரமாக இருக்கிறது என்றும் எண்ணுவதை நாம் விட்டொழிக்கவேண்டும். அத்தியாத்ம சுவானுபவப் போக் குதான் அதன் உண்மையானதும் பிரதானமானதுமான கருத்தாகும். ஆனால் அந்த சுவானுபவமானது வேற்றுமை யற்ற ஒரே ரீதியான அனுபவமல்ல; அது பல முகங்கள், பல நிறங்கள் கொண்டது. அதன் மிகஉயர்ந்த நிலையில் தீவிரமா யிருக்கிறதைப் போலவே, சமய சந்தர்ப்பத்திற் குத் தக்கபடி பொருந்திக்கொள்ளுவதிலும் அது மிக இளக்கமாக யிருக்கிறது. அத்தியாத்ம உணர்வு தொடக் கத்திலிருந்தே மேலோங்கியும், நிலையாயும், திரும்பித் திரும்பி வருவதாயும் இருக்கிறது. அதுவே மற்றவைகளுக் கெல்லாம் தாரகமாக விளங்குகின்றது. பாரத நாட்டின் பெருமை விளங்கிய முதற்காலம் அத்தியாத்ம காலமே யாகும். அக்காலத்தில் அது வாழ்வின் உண்மையை, அந் தர்ஞான ஒளியைப் பெற்ற மனத்தின் மூலமாகவும், சைத் தியாத்ம (**Psychic**) வாழ்வினுடையவும் தூல வாழ்வி னுடையவும் உள்ளனுபவத்தின் மூலமாகவும், அவற்றின் கூடார்த்தத்தை விளக்குவதன் மூலமாகவும் தீவிரமாக நாடியது. அவ்வாரம்ப காலத்தில் அதன்மீது பொறிக்கப் பட்ட அத்தியாத்ம அடையாளத்தை அது என்றும் இழக்க வில்லை. அதற்கு மாறாக, சமுதாய வாழ்வின் ஒவ்வொரு படியிலும் புதிய ஆத்மானுபவத்தையும், தான் நூதன மாகக் கண்டுபிடித்ததையும் கொண்டு அதைச் செழுமை யுறும்படிச் செய்தது.

## ஆத்மஞானம் வாழ்க்கையைத் தழுவியது

ஆனல், இந்த அத்தியாத்மப் போக்கானது மேல் நோக்கிப் பாய்ந்து, நிர்க்குணமானதும், அந்தரங்கத்தி லிருப்பதும், மனத்தினல் கிரகிக்கக்கூடாததுமான விஷ யங்களில் மட்டும் லயமாய்விடுவதில்லை. அது தன் ஒளிக் கதிர்களைக் கீழ்புறமாயும் வெளிப்புறமாயும் பரப்பி, சிந்தனை யின் பல போக்குகளையும் வாழ்க்கையின் வளங்களையும் தழுவுகின்றது. ஆகவே, பாரத நாடு இரண்டாந் தடவை பெருமையுற்று விளங்கிய நீண்ட சகாப்தத்தில், புத்தியின் ஆற்றலும், அறவுணர்ச்சியும், அத்தியாத்ம உண்மையின் ஒளியில் வாழ்வை உருப்படுத்தி ஆட்சி செலுத்த ஆணை பெற்று தீவிரமாகச் செயலில் இறங்கின இச்சா சக்தியும் சிறப்புற்றோங்கின. இந்த சுத்த சைதன்னிய யுகத்திற்குப் பிறகு, தரும யுகம் பிறந்தது. வேத உபநிடத காலங்களுக் குப் பிறகு, புராண இதிகாச காலம் வந்தது. பின் சொன்ன காலத்தில், வீர தீரச் செயல்கள், சமூக நிர்மாணம், ரக அமைப்பு, சிந்தனை, தத்துவம் முதலியன பல நூற்றுண்டுக ளாக வளர்ச்சியடைந்தன. இக்காலத்தில்தான் இந்திய வாழ்க்கை, கலாசாரம் ஆகியவற்றின் புற வடிவங்கள் விரி வான எல்லைக்குள் நிலையாக அமைந்தன. அவைகளின் பிற்கால வளர்ச்சியும் ஆரம்பத்திலேயே நிர்ணயிக்கப்பட் டிருந்தது. சமஸ்கிருதக்கலைகள் புகழ்பெற்றோங்கிய காலத் தில், இந்த அறிவுப் பெருக்கானது நுண்மையான புலமை யாகவும், விஞ்ஞானம், நுண்கலை, இலக்கியம், அரசியல், சமூகதத்துவ சாத்திரம், லௌகிக வாழ்க்கை—இவை களைப் பற்றிய விரிவான ஆராய்ச்சியாகவும் மலர்ந்தது. இதே காலத்தில், அழகுணர்ச்சி மட்டும் அன்றி, உள்ளத் தெழுச்சி, புலனுணர்ச்சி, காம இச்சைகள் ஆகிய அனு பவங்களின் ஆழங்களும் அளந்தறியப்பட்டு வந்ததைக்

காண்கிறோம். ஆனால், இந்த மனோமயப் பிராண மய மான வினைகளுக்கெல்லாம் பின்புறமாக பழைய ஆத்ம ஞானம் ஆட்சி புரிந்தது. இதன் கடைசி காலத்தில், அதாவது பண்டைக் கலைச் சிறப்புக்குப் பிந்திய காலத்தில், கீழ்த்தரமான வாழ்க்கை முழுமையுமே மேலே உயர்த்தப் பட்டு, சேதனத்தின் உயர்நலங்கள் அவ் வாழ்க்கையில் ஆழ்ந்து பதியும்படிச் செய்யப்பட்டன. பௌராணிக, தாந்திரிக முறைகளினுடையவும், பக்தி மதங்களினுடை யவும் உட்பொருள் இதுவே யாகும். பிற்கால வைஷ்ணவ மதமானது, பாரத ஜீவ சக்தியிலிருந்து மலர்ந்த கடைசி யான நேர்த்தியான மலராகும். அம் மதமானது அழ குணர்ச்சி, உள்ளநெகிழ்ச்சி, புலனுணர்ச்சி ஆகியவைகளை யெல்லாம் ஆன்ம வாழ்க்கையின் ஊழியத்தில் திருப்பிவிடு வதே தனது முக்கியமான வேலையாகக் கொண்டது. அதுவே வளைவைப் பூர்த்தி செய்தது.

### மூன்று பிற்போக்கான இயக்கங்கள்

மேற்சொன்ன வட்டம் பூர்த்தியானதன் பின்னோ டேயே, க்ஷீணதசையின் அந்தியகாலம் வந்தது. மூன்று பிற்போக்கான இயக்கங்கள் இவ் அந்திய காலத்தை ஆயத்தப்படுத்தின. முதலாவதாக, அபரிமிதமான பிராண சக்தியானது மற்றவைகளைக் காட்டிலும் அதிகமாகச் சோர்வுறவும், வாழ்விலும் சிருஷ்டியிலும் உள்ள ஆநந்தம் மங்கவும் ஆரம்பிக்கின்றன. இவ் வீழ்ச்சியிலுங்கூட, பிராண சக்தியானது அற்புதமான தேஜசுடன் விளங்கு கிறது. ஆயினும், அதன் பண்டைப் பெருமையுடன் ஒப் பிட்டுப் பார்த்தால், இவ் வீழ்ச்சியானது வெளிப்படையாக வும் படிப்படியாகவுமே நடந்திருக்கிறது என்பது தெரிய வரும்.

இரண்டாவதாக, பழைய சுதந்திரமான அறிவியக்கம் வெகு சீக்கிரத்திலேயே நின்றுவிடவும், சாஸ்திரோக்த மான, அதி நுட்பமான, புத்தியும் சிருஷ்டிக்கவல்ல அந்தர் ஞானமும் உறக்கங்கொள்ளவும் ஆரம்பித்துவிடுகின்றன. பண்டை ஞானத்தில் சரியாகப் புரிந்துகொள்ளப்படாத சில துணுக்குகளைக் கிளிப்பிள்ளையைப் போலத் திருப்பித் திருப்பிச் சொல்லும் வழக்கம் மட்டும் எஞ்சி நிற்கிறது. பெருமை வாய்ந்த பண்டைக்கால அறிவைக்கொண்டு சிருஷ்டித்த வடிவமைப்புகளுள் மீந்திருப்பவைகளில் மன மும் உயிரும் கல்லாய்ச் சமைந்து நிற்கின்றன. பழைய கோட்பாடும் சம்பிரதாயமும் காலப்போக்குக்கு வளைந்து கொடுக்காமல் யதேச்சாதிகாரம் செலுத்தவே, தங்கள் உண்மையான பொருளையும் ஜீவனையும் இழந்து விடுகின்றன.

கடைசியாக, ஆத்மஞானக் கொழுந்து ஒன்றே எஞ்சி நிற்கின்றது. ஆனல், அது இனியும் முன்போலப் பரந்த, தெளிவான சுவாலையுடன் எரியாமல் குப்புக் குப்பென்று கிளம்பிச் சிதறிவிடுகிறது. அதனல் பழைய அற்புதமான தொகுப்பும் இணக்கமும் போய், அத்தியாத்ம உண்மை களிற் சில வற்புறுத்தப்பட்டும், மற்றவை அலட்சியம் செய்யப்பட்டும் வரும்படியான நிலைமை ஏற்பட்டு விடு கிறது.

இச் சுருக்கமானது, இந்தியக் கலாசாரத்தின் பெரு முயற்சி கொஞ்சம் தோல்வி யடைவதற்கும், சம்பூரண ஆத்மசேதனத்தை நோக்கிச் செல்லும் மனம், உயிர் ஆகிய வற்றின் அபிவிருத்தி குறைந்துவிடுவதற்கும் ஒப்பாகும். ஆரம்பம் மிகவும் சிறப்புற்றிருந்தது; வளர்ச்சியும் மகத் தானதாயிருந்தது. ஆனல், அபிவிருத்தியும், காலப் போக்

குக்குத் தகுந்த பொருத்தமும், புதுமலர்ச்சியும் ஏற்பட வேண்டியிருந்த ஒரு குறித்த நிலையில் பழைய நாகரிகம் திடுக்கென்று கொஞ்சம் பின்வாங்கி, கொஞ்சம் வழி தப்பிச் சென்றது. அதன் முக்கியாம்சம் அழியாமல் நின்றது என்பது உண்மையே. அது இன்றும் பாரதமக்களின் உள்ளத்திலும், அவர்களின் பழக்க வழக்கங்களிலும் நினைவிலும் விளங்குகின்றது. ஆனல் அதன் தொழிற்பாட்டில் பெருங்குழப்பம் புகைபோன்று மூண்டெழுந்து அதை மழுக்கியது. உட்காரணங்களையும் புறகாரணங்களையும் இப்போது விவரிப்பது அவசியமில்லை. நடந்த விஷயம் என்னவோ அதோடு நிற்கிறது. புதிதானதும் முன்பு எப்போதும் ஏற்பட்டிராததுமான நிலைமைகளில் பாரத புத்தி கொஞ்ச நேரம் ஆதரவற்றிருந்ததற்கு இக் குழப்பமே காரணமாகும்.

## ஐரோப்பிய நாகரிகத்தின் படையெடுப்பும் விளைபயன்களும்

இத்தருணமே, ஐரோப்பிய நாகரிக அலையானது இந்தியாவின் மீது பலமாக மோதி அடித்தது. அதன் பின்னரும் உயிருடனிருக்கச் சக்தி யற்றிருந்தவை பெரும்பாலும் அழிந்தன; பல உருக் குலைந்தன; மிகுதியானவை தங்களது ஜீவசக்தியை மேன்மேலும் இழந்துகொண்டே வந்தன. ஒரு புதிதான — முற்றிலும் நேர் விரோதமான — நாகரிகம் நுழைந்ததன் விளைபயன் இதுவே யாகும். ஒரு புது முயற்சி வந்தது; ஆனல் அது செம்மையின்றியும், ஒழுங்கின்றியும், அன்னியக் கலாசாரத்தை நகல் செய்வதாயும் இருந்தது. அது ஒரு சோதனைக்காலமாகவும், ஆபத்தான, கடுமையானதொரு பரீட்சையாயு மிருந்தது. பாரத சீவனுக்குச்

சுபாவமான பழைய தூண்டுதல்கள் சீவனிழந்து வந்தன. அந்நியக்கருத்துக்களும் பழக்க வழக்கங்களும் கண்மூடித் தனமாக நகல் செய்யப்பட்டன.

இந்த இருவகையான அமுக்கினால், திடசக்தி குறைவாகப் பெற்றுள்ள வேறெந்த ஜீவனும் இருந்திருப்பின் இது கட்டாயமாக மூழ்கி அழிந்திருக்கும். இந்த நிலைமையானது சமுதாயத்திற்கும் நாகரிகங்களுக்கும் எவ்வளவு ஆபத்தானது என்பதைச் சரித்திரம் நமக்குக் காட்டுகின்றது. ஆனால், அதிருஷ்டவசமாக, அங்கு பிராணசக்தி இன்னும் இருந்தது. அது சிறிது நேரமே உறக்கங் கொண்டது; சாகவில்லை. உயிர்க்கனல் அவியாமலிருக்கவே, துன்பத்திற்குள்ளேயும், அத் துன்பத்திலிருந்து விடுதலையடைவதற்கு ஒரு வழி இருந்தது. ஐரோப்பிய வாழ்க்கை, கலாசாரம், ஆகியவற்றின் மோதுதலானது தாற்காலிகமாக எவ்விதச் சிதைவையும் அழிவையும் உண்டாக்கினபோதிலும், இவ் வுயிர்த்தீ அத்தியாவசியமாக வேண்டியிருந்த மூன்று தூண்டுதல்களைத் தந்தது. இது உறங்கிக் கொண்டிருந்த அறிவு ஆராய்ச்சிகளைத் தூண்டி உயிர்ப்பித்தது; வாழ்க்கையை மீண்டும் பழைய இடத்தில் வைத்துப் புதுச் சிருஷ்டியில் விருப்பங் கொள்ளச் செய்தது; புத்துயிர் பெற்றுவரும் இந்திய ஜீவனைப் புதிய நிலைமைக்கும் புதிய லட்சியங்களுக்கும் நேருக்கு நேராக வைத்து அவைகளைக் கிரகித்துச் சீரணித்து வெற்றி பெறவேண்டிய தன் அவசியத்தை அறிவுறுத்தியது. சமுதாயத்தின் புத்தியானது தனது புராதனக் கலாசாரத்தை ஒரு புதிய நோக்குடன் நோக்கி, அதன் உட்பொருளை உணர்ந்ததுடன் தற்கால அறிவுடனும் கருத்துடனும் அதை ஒப்பிட்டுப் பார்த்தது.

## மறுமலர்ச்சியின் மூன்று முன்னணி வேலைகள்

விழிப்புற்ற அந்த திருஷ்டியினாலும் எழுச்சியினாலும் பாரத நாட்டில் மறுமலர்ச்சி ஏற்பட்டுவருகின்றது. அவ்வையே இப் புத்துயிர்ப்பின் எதிர்காலப் போக்கை நிர்ணயிக்கவேண்டும். பண்டைக்கால ஆத்மஞானத்தையும் அனுபவத்தையும், அவற்றின் பூரண மகிமையுடனும் ஆழத்துடனும் நிறைவுடனும் மீண்டும் பெறுவதே இதன் அதிமுக்கியமான பிரதம வேலை யாகும். இந்த ஆத்மஞானமானது, தத்துவம், இலக்கியம், அழகுக்கலை, விஞ்ஞான சாத்திரம், விமர்சன அறிவு, ஆகியவற்றில் பரவி வியாபிப்பது இரண்டாவது வேலை யாகும். தற்காலப் பிரச்னைகளைப் பாரத ஜீவசக்தியின் ஒளியைக் கொண்டு நவீன முறையில் சமாளிப்பதும், ஆன்ம ஒளிபெற்ற சமூகத்தை பூரணமாக ஒன்றுபடுத்தி யமைக்க முயலுவதும், மூன்றாவதும் மிகக் கடினமானதுமான வேலையாகும். இம் மூன்று வழிகளில் அதற்குக்கிடைக்கும் வெற்றியே மக்கட் குலத்திற்கு அது புரியப்போகும் உதவியை அளந்து காட்டும்.

## வாழ்க்கை சேதனத்தின் வெளிப்பாடு ஆதல்

உண்மைகளுள் மிக உயர்ந்ததாயும் அநந்தமாயும் திகழ்வது சேதனம். இவ் வுண்மையின் ஒளியில் வளரவும், இதில் தங்களது சொந்த உண்மையையும் நிறைவையும் காணவும் நாடுகின்ற கீழ்த்தரமான, அநந்தமான, சாத்தியங்களை யுடையதே உயிராகும். நமது திடசித்தம், நமது அற வுணர்ச்சி, நமது அழகுணர்ச்சி—இவை பிரதிபலிப்பவையாயும் நடுவே இருப்பனவாயும் இருக்கின்றன. உயிர் வாழ்தலையே எல்லாமாகக்கொண்டு, அவ் வாழ்க்கையை ஊக்கி அலங்காரப்படுத்துவதன் பொருட்டே உயர்

சக்திகளைத் தேவையான அளவு கீழே அழைப்பதுதான் மேலைநாட்டு முறையாகும். ஆனால், இதற்கு நேர் விரோத மாக, சேதனத்தையும் உயர் சக்திகளுக்குள்ளே மறைந் துள்ள அதிதீவிரப் போக்குகளையும் உள்ளுக்குள்ளேயே கண்டு, உயிரை ஏதோ ஒரு வழியில் கட்டுப்படுத்தி, அது சேதனத்திற்கு இணங்கி அதை வெளிப்படுத்தும்படிச் செய்து, உயிரின் சக்தியை அதிகரிப்பதே இந்திய முறை யாகும். புத்தி, திடசித்தம், அறவுணர்ச்சி, அழகுணர்ச்சி, உள்ளத் துணர்ச்சி, இவை சாதாரணமாக மனநிலையில் சாதிக்கக்கூடியவை ஆகிய இவற்றை ஆழ்ந் தறிவதோடு நில்லாமல், இவை அடையக்கூடிய மகோன்னதமான அந் தர் ஞானத்தின் பேரொளிக்கும் சக்திக்கும் இவற்றை உயர்த்துவதே இம்முறையின் போக்காகும். இந்த சேத னத்தையும் உயிர் விஷயமாகவுள்ள இந்த உயர் நோக்கை யும் ஆழ்ந்து மறைந்துள்ள—ஆனால் வெளிப்பட்டுக் காரியப் படக்கூடிய—இச்சக்திகளையும் மீண்டும் சிருஷ்டிக்கத்தக்க தாயும் உலகில் ஆதிபத்தியம் செலுத்தக்கூடியதாயும் உள்ள மகத்தானதொரு சக்தியாகச் செய்வதே பாரத நாட்டின் மறுமலர்ச்சி இயக்கத்தின் வேலையாக இருத்தல் வேண்டும்.

ஆனால் தன்னைப்பற்றிய இவ்வுண்மையை அது இன் னும் தெளிவாக அறிந்து கொள்ளவில்லை. இந்திய முயற்சி யானது, இது சமயம், இன்னும் பெரும்பாலும், ஐரோப் பியமுறை, தூண்டுதல் ஆகியவைகளின் பதிவின் கீழ்தான் நடந்து வருகின்றது. நமக்குள்ளேயுள்ள ஜீவனுக்கு இவை அன்னியமாக இருப்பதால், முயற்சியானது திட சித்தமற்றதாயும், உருவ அமைப்பில் துர்பலமாயும், விளை வில் பயனற்றதாயும் இருக்கின்றது. ஏனெனில், அது நமது ஜீவனின் அந்தரங்கங்களினின்று எழவில்லை. ஏதோ

சில போக்குகளிலேதான் ஆத்மஞானத்தின் தெளிவான ஒளி கொஞ்சம் காணப்படுகின்றது. உயர் ஒளி பரவி பொதுப்படையான பிறகு, பாரத நாட்டின் மறுமலர்ச்சி எதிர்பார்க்கக் கூடியதொரு விஷயமாக மட்டும் இராமல், உண்மையாகவே நம் முன்னே நடைபெறும் ஒரு விஷய மாக இருக்கின்றதென நாம் சொல்லக்கூடும்.

---

## 2. மறுமலர்ச்சியின் மூன்று படிகள்

பாரத நாட்டின் மறுமலர்ச்சியானது இன்று தவிர்க்க முடியாததொரு விஷயமாக விளங்குகிறது. இம் மறுமலர்ச் சியின் கதி அல்லது போக்கைச் சரித்திர பூர்வமாகவும் தர்க்க ரீதியாகவும் மூன்று படிகளாகப் பகுக்கலாம். இப் படிகளின் மூலமாகவே இடைக்காலம் நிர்வகிக்கப்பட்டும் பழைய சிக்கல்கள் ஒழிந்தும்,புத்துருவும் புதுவமைப்பும் ஏற் பட்டும், பழைய கலாசாரம் உருமாறி ஒரு புது யுகம் பிறந் தும் வருகின்றது. பழைய, பட்டுப்போன நாகரிகத்துடன் ஒரு புது நாகரிகத்தைச் சேர்த்துக் கொள்வதன்று இம் மறுமலர்ச்சி; இது ஒரு உண்மையான மறு பிறப்பு அல் லது புத்துயிர்ப்பேயாகும். இதற்கு மூல அஸ்திரவாரங் கள் ஏற்கெனவே போடப்பட்டிருக்கின்றன. ஆயினும் இறுதியான பலன் இன்னும் கண்ணுக்குப் புலனாகாமல் இருந்து வருகின்றது.

ஐரோப்பியத் தொடர்பை ஏற்றுக்கொண்டு பழைய கலாசாரத்தின் பிரதான அம்சங்கள் பலவற்றை மீண்டும் அடியோடு ஆராய்ச்சி செய்யப் புகுந்ததும், அதன் மூல தத்துவங்கள் சிலவற்றைத் தீவிரமாக மறுத்ததும் முதற்படி யாக இருந்தன.

பாரத நாட்டின் சிவனைது ஐரோப்பிய ஆதிக்கத் திற்கு அப்படியே இணங்கிவிடாமல், அதை எதிர்த்தும் அது அளித்ததைச் சில சமயம் அடியோடு மறுத்தும், பண்டைத் தேசிய கலாசாரத்தின் மூலாம்சத்தைப் போலவே அதன் புற அம்சத்தை வற்புறுத்தியும் வந்தது. ஆயினும், ஐரோப்பியக் கலாசாரம் சீரணிக்கப்பட்டுத் தன்மயமாகி வந்ததை இவ்வெதிர்ப்பு மறைத்து வந்ததே யன்றி பிறிதொன்றும் செய்யவில்லை. இது இரண்டாவது படியாகும்.

மூன்ருவது படி இப்பொழுதுதான் ஆரம்பித்திருக் கிறது. இது புது சிருஷ்டியின் ஒரு போக்கேயாகும். இப் போக்கில் இந்திய மேதையின் ஆத்மசக்தி உன்னதமாக விளங்குகின்றது. அது தன் உண்மைகளை மீண்டும் அடையப் பெறுவதுடன், நவீனக் கருத்திலும் அமைப்பி லும் எது உரமானதாயும், உபயோக முள்ளதாயும், தவிர்க்கமுடியாததாயும் இருக்கின்றதோ, அதையும் ஒப் புக் கொள்ளுகின்றது. ஆனல், அதையும் மாறுதலடையும் படிச் செய்து, இந்திய மயமாக்கி, தன்னுள்ளேயே சம்பூ ரணமாக ஐக்கியப்படுத்தி, அதன் அன்னிய இயல்பினை மறையும்படிச் செய்கின்றது. இவ்வண்ணம், புதுமையின் செல்வாக்குக்கு உட்பட்டு விடாமலும், அதற்கு உடை மைப்பட்டு விடாமலும் இருப்பதுடன், அப்புதுமையையே தன் ஆதிக்கத்திற்குள் கொண்டுவந்து உடைமைப் படுத்திக் கொள்ளும் புராதன தேவதையாகிய பராசக்தியின் சுபாவ மான தொழிற்பாட்டில், இந் நவீனக் கருத்தும் அமைப் பும் மற்றுமோர் இசைவும் பொருந்திய அம்சமாகவும் விளங்குமாறும் செய்கின்றது.

## பாரதத்தாய் புதுமையில் மெல்லவே புகுவாள்

இயற்கையன்னையின் விவகாரம் மனிதரைப் பற்றிய தாயிருப்பினும் சரி, பொருளைப் பற்றியதாயிருப்பினும் சரி, அவளுடைய பல போக்குகளில் யாதொன்றும் தற்செயலாகவோ, புற காரணங்களின் சக்தியினாலோ ஏற்படுவதன்று. மிகப்பெரிய மாறுதல்களின் கதியும் உட்புறமாயுள்ள விஷயங்களினாலேயே நிர்ணயிக்கப் படுகின்றது. காலம் என்னும் வரையறை யற்ற பாரதத்தாய் தன்னியல்பு கொண்டே விளங்குவதால், இந்த இடைக்காலத்தின் சிக்கலான நிலைமை முன்னாலேயே நிர்ணயிக்கப்பட்டும் தவிர்க்க முடியாமலும் இருந்தது. மேல்நாட்டுக் கருத்துக்களையும் அவைகளின் உருவ அமைப்புக்களையும் அப்படியே விரைவாக ஏற்றுக்கொண்டு, பின்னர் தன் புராதனமான மூலாதாரக் கருத்துக்கள் அவ்வன்னிய மாறுதல்களுடன் சாத்தியமானவரையில் இணங்கிப் பொருந்துமாறு விட்டுவிடுவதை அவள் ஒப்பவில்லை. நவீன ஜப்பானை உண்டு பண்ணிய வேகமான உருமாறுதலைப் போன்றதோர் உருமாறுதலுக்கு, அங்கிருந்ததைப் போலவே இங்கும், புற நிலைமை அனுகூலமாக இருப்பினும், அதை அவள் ஏற்றுக் கொள்ளாதிருந்தனள்.

ஏன்? ஜப்பானின் ஜீவன் அவளுடைய குணச்சிறப்பிலும் சௌந்தரிய உணர்ச்சியிலுமே உளது. ஆதலால் அவள் எப்போதுமே அன்னிய விஷயங்களை விரைவாகச் ஜீரணம்செய்து தன்மயமாக்கிவிடும் சக்தியை யுடையவளாக இருந்திருக்கிறாள். வெகு காலமாகவுள்ள அவளுடைய திடமான குணச்சிறப்பானது அவளுடைய தனித் தன்மையைப் பாதுகாக்கப் போதுமானதாயும், அவளுடைய கலை விழியானது அவளுடைய ஆன்மா அழி

வுருமல் இருக்கச் செய்யவல்ல சக்தியுடையதாயும் இருந்து வருகின்றன. ஆனல், பாரதத்தாய்க்கு ஆன்ம வாழ்க்கையே பிரதானம். உயிரின் உல்லாசமும் உற்சாகமும் அவளுக்கு அவ்வளவு அதிகமாகக் கிடையாது. ஆகவே, நிலைமைக்குத் தக்கபடி தயாராகத் தன்னைப் பொருத்தியமைத்துக் கொள்ளும் சிருஷ்டியின் குணச் சிறப்பு அவளிடமில்லை.

ஆயினும், மிகத் தீவிரமாயும் ஆழமாயும் ஆலோசனை செய்யும் இயல்பு அவளிடமுண்டு. அவள் தனது வாழ்க்கையின் புற அம்சங்களை மாற்றுவதற்கோ, புதுக்கியமைப்பதற்கோ, விஷயங்களைத் தனது உள்ளத்தின் ஆழத்திற்குக் கொண்டு செல்லவேண்டியிருப்பதால், அவளது போக்கானது சாவதானமாயும், நிச்சயமற்றதாயும், நீண்டகாலம் பிடிப்பதாயும் இருக்கக்கூடும். அவ்வண்ணம் அவை உள்ளுக்குள்ளே முற்றிலும் சீரணமாகி, தன்மயமாக்கப்பட்டு புத்துருவின் சக்திகள் நிர்ணயிக்கப்படும் வரையில், தான் செல்லும் புதியபாதையில் அவள் இதினும் சரளமாக முன்னேற முடிவதில்லை.

## இயக்கத்தின் சிக்கல்

அவள் தீர்க்கவேண்டிய பிரச்னைகளின் கஷ்டங்களெல்லாம் இயக்கத்தின் சிக்கலிலிருந்தே வருவனவாகும். அதன்போக்கில் பல அபிப்பிராயங்கள், நோக்குகள், சார்வுகள் ஆகியவை நிலைமையைக் குழப்பிவிடுவதால், சுலபமாகவும், தெளிவாகவும் திடமாகவும் நாம் முன்னேறுவது தடைபடுகின்றது. ஆகவே, எதிர்காலத்தின் போக்கு என்னவென்பதைப் பற்றி யாதொரு தெளிவான கருத்துமின்றி, குழப்பத்தில் நெருக்குண்டு, நிமிஷத்திற்கொருதரம்

மாறுபடும் பிரேரணையலைகளின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் ஒப்ப, நாம் அலைக்கழிக்கப்படுவதைப் போலவே காண்கின்றது.

ஆயினும், இந்நிலையிலும் ஓர் உறுதியுள்ளது. உட்புறமாக இருந்து நம்மை வழிநடத்திச் செல்லும் சக்தியானது ஒருதடவை தனது மார்க்கத்தைக் கண்டுபிடித்து, தனது உள்ளுறைப் பொருளை வெளிப்புறத்திலும் ஒளிரும்படிச் செய்துவிட்டால், அது மேல்நாட்டு நவீனத்தை ஆசியப் போர்வையால் மூடி உள்ளே நுழைத்துவிடும் ஒரு முயற்சியாக இராமல், மானிட நாகரிகத்தின் எதிர்காலத்துக்கு மிகவும் முக்கியமானதும் மகத்தானதுமான ஒரு புதிய சிருஷ்டியாய் விளங்குவது திண்ணம்.

## அறிவாளிகளின் போக்கு

பாரதநாட்டில் மேல்நாட்டுக் கல்வியின் முதற் பயனாக உதித்தவரும், புதிதாகச் சிருஷ்டிக்கும் ஆற்றலும் மேதையும் வாய்ந்தவரும், சொற்ப தொகையினருமான ஆதி அறிவாளிகளின் கருத்து இதுவாக இல்லை. அவர்கள் ஜப்பானிய நாட்டில் பின்னர் ஆச்சரியமான வேகத்துடன் நடைபெற்ற உருமாறுதலைப் போன்ற ஒரு பெரிய மாறுதலையே ஆத்திரத்துடன் எதிர்ப்பார்த்திருந்தனர். மனத்திலும், உள்நோக்கிலும், வாழ்க்கையிலும் அடியோடுமாறுதலடைந்து முற்றிலும் புத்துருவு பெற்ற ஒரு புது பாரதத்தை அவர்கள் வரவேற்ற வண்ணமாக இருந்தனர். அவர்கள் உட்கருத்தில் தீவிர தேசபக்தர்களாக இருந்தும், மனப்பாங்கில் நாட்டின் தனிப்பண்பை இழந்தவர்களாக இருந்தனர். நமது புராதனக் கலாசாரம் ஒரு அரைகுறையான நாகரிகம் என்னும் மேல்நாட்டு எண்ணத்தை அவர்கள் வாய்விட்டு உரைக்காவிடினும், செயலில் அப்படியே ஒப்

பூக்கொண்டு ஒழுகினர். அவர்களுடைய பிரதான லட்சியங்கள், மேல்நாட்டு இரவல்களாகவோ, குறைந்தபட்சம் தாங்கள் பெற்ற கல்வியின் பயனாக மேல்நாட்டு நோக்கினின்றும் ரகத்தினின்றும் உயிர்ப்பெற்றெழுந்தவையாகவோ இருந்தன. அவர்கள் பாரதநாட்டின் இடைக்கால நாகரிக வாழ்க்கையை எதிர்த்து, அதனின்றும் விலகி அது சிருஷ்டித்த யாவற்றையும் புறக்கணிப்பதற்கு உள்ளங் கொண்டனர். அதனின்றும் எதையேனும் ஏற்றுக்கொண்டிருந்தாலும், அதைக் கவிதையின் சூசனைக் குறியைப் போல மதித்து, அதற்கொரு நவீன பொருளையும் மேற்பூச்சையும் கொடுத்தனர்.

ஆனால், இதற்கு நேர் மாறாக, புராதன இந்திய நாகரிகத்தின் சில போக்குகளிலாயினும் அவர்கள் பெருமை கொண்டு, அதனின்றும் தங்களது புது நோக்குக்கு உட்படக்கூடிய சில விஷயங்களைக் கையாள இசைந்தனர். ஆயினும், அவ்விஷயங்களின் ஆதி உட்கருத்தையும் நோக்கையும் கிஞ்சித்தும் கிரகிக்கமுடியாமல் தங்களுடைய மேல்நாட்டு மயமான புத்திக்கு ஒத்துவராதவைகளை அவைகளினின்றும் விலக்கிவிட முயன்றனர்.

மேலும், அவர்கள், புற ஆடம்பரம் அற்றதாயும், சாமான்னிய பகுத்தறிவுகொண்டு ஆக்கப்பெற்றதாயுமானதொரு மதத்தைக் கண்டுபிடிக்க முயன்றனர். ஆங்கில இலக்கிய மாதிரிகளின் முழு அமைப்புக்களையும், கருத்துக்களையும் ஜீவனையும் இறக்குமதி செய்து, அவைகளை அப்படியே கையாண்டு ஒரு புது இலக்கியத்தைச் சிருஷ்டித்தனர். இதர கலைகளின் பயன்களை அவர்கள் அடியோடு அசட்டை செய்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வழங்கிய மத்திய வகுப்பினரின் ஆதிக்

கத்தை அடிப்படையாகக் கொண்ட போலி ஜனநாயகத்தை அப்படியே ஏற்றுக்கொள்வதும், நகல் செய்வதுமே தங்களுடைய அரசியல் கோட்பாடும் நம்பிக்கையும் என அவர்கள் கொண்டிருந்தனர். ஐரோப்பியச் சமூக அமைப்பின் கருத்துக்களையும் பிரதான குண விசேஷங்களையும் இந்தியச் சமூக அமைப்பில் நுழைத்து ஒரு புரட்சியை உண்டாக்க அவர்கள் விரும்பினர்.

### அவர்களின் முறை தவறானது

இவ்விதப் பேராவலுடனும் திட நிச்சயத்துடனும் அவர்கள் கிரகித்த விஷயங்களுக்கு வருங்காலத்தில் எத்தகைய மதிப்பு இருக்கக் கூடுமாயினும், அவர்களுடைய முறை தவறானது என்றே நாம் இன்று காண்கிறோம். பாரதநாடு ஆங்கிலமயமான ஒரு நாடாக ஆவது இனி சாத்தியமில்லை; அது விரும்பத்தக்கதுமன்று. அவர்கள் சென்ற வழியில் நாமும் கடைசி வரையில் தொடர்ந்து சென்றிருந்தோமானால், கஷ்டப்பட்டுக்கொண்டு ஐரோப்பிய நாகரிகத்தை நகல்செய்பவராகவும், ஐரோப்பிய நாகரிக வளர்ச்சியை விவேகமற்றுப் பின்பற்றிக்கொண்டும், அம்முயற்சியில் என்றும் தடுமாறிக்கொண்டும், எப்போதும் அந்நாகரிகத்திற்கு ஐம்பது வருடங்கள் பின்தங்குபவராகவும் இருந்திருப்போம். இச்சிந்தனை இயக்கம் வெகுகாலம் நீடித்திருக்க முடியவில்லை. அதன் ஒரு சிறு அம்சம் மட்டும் இன்னும் இருக்கிறது. ஆயினும், அது மீண்டும் திடமாக உயிர்பெறுவதற்கு வழியில்லாதவாறு அதன் முழு சக்தியும் போய்விட்டது.

### அதன் விளைவுகள் 1. புத்தியின் விழிப்பு

ஆயினும், முதற்பருவத்தில், இவ்வண்ணம் பதம் பார்க்காமல் பச்சையாக அப்படியே ஏற்றுக்கொள்ளப்

பட்ட மேல்நாட்டு நாகரிகத்தினின்றும் சக்திவாய்ந்த மறு மலர்ச்சிக்கு இன்றியமையாதனவாயும் பயன்படத் தக்கனவாயுமான சில விளைவுகள் உண்டாயின. அவ்விளைவு களில் மூன்று முதல்தரமானவையெனக் குறிப்பிடவேண் டும்.

முதலாவதாக, அந்த நாகரிகம் செலுத்திய ஆதிக்கத் தின் காரணமாக நமது புத்தி விழிப்புற்றுச் சுயேச்சையா கத் தொழில்புரியவாரம்பித்தது. இவ்விழிப்பு முதலில் குறு கிய எல்லைக்குட்பட்டதாயும் கருத்துக்களின் ஒரு பகு தியை மட்டும் தழுவியதாயும் இருக்கிறது. இது இப்போது மக்களுக்கும் நாட்டுக்கும் உரிய எல்லா விஷயங்களிலும் பரவி, தான் பற்றும் ஒவ்வொரு பொருளிலும் மேன்மே லும் அதிகரிக்கும் ஆவலுடனும், மேன்மேலும் வளரும் கற்பனு சக்தியுடனும் காரியப்படுகிறது. எல்லா விதமான அறிவையும் பெறவேண்டுமென்னும் தணிக்கமுடியாத பழைய தாகத்தை அது இந்திய புத்திக்கு மீண்டும் அளித்து வருகின்றது. புத்தியின் தொழிலுக்கு ஒரு விரிவையும், ஆழத்தையும், வளைந்து கொடுக்கும் ஆற்றலையும் கூடிய சீக்கிரத்திலேயே அது அளித்தாகவேண்டும். பழைய காலத்தில் வெகு சிலரால் ஒரு குறித்த எல்லைக்குள் பிர யோகிக்கப்பட்டு வந்ததும், ஆனல், இப்போது மானிட புத்திக்கு இன்றியமையாத முஸ்திப்பாக ஆய்விட்டது மான விமர்சன சக்திக்கும், விஷயங்களைப் பூரணமாக உற்றுநோக்கி அறிந்து தங்கு தடையின்றி நிதானித்து நிர்ணயிக்க வேண்டும் என்னும் பேரவாவுக்கும் அது முழுச் சந்தர்ப்பம் அளித்திருக்கின்றது.

ஐரோப்பிய நாகரிகத்தை அப்படியே நகல்செய்து வந்த முதற் பருவத்தில் அவையெல்லாமே ஏற்பட்டுவிட

வில்லை யாயினும், அது விதைத்த விதை இன்று செழிப் புற்று வளர்ந்து பலன்தர ஆரம்பித்திருப்பதைக் காண்கி ரோம்.

## 2. கொந்தளிப்பு

இரண்டாவதாக, அது பழைய கலாசாரத்தில் புதுக் கருத்துக்களைப் புகுத்தி ஒரு கொந்தளிப்பை உண்டாக்கி யது. நமது வழக்கமான நோக்கில் யாதொரு பலமான தாக்குதலும் ஏற்படாமல் நிலையான பழைய சம்பிரதாயங் களின் வழியே நாம் செல்லும்படி விட்டுவிடாமல், இப் புதுக் கருத்துக்களை நம் பார்வை முன் நிறுத்தி இவைகளை நாம் சமாளிக்கும்படி நிர்ப்பந்தப்படுத்தியது.

## 3. பழமையைப் புதுவிழியுடன் நோக்கல்

கடைசியாக, அது நம்முடைய பண்டைச் செல்வங் களுள் அடங்கியுள்ள யாவற்றையும் ஒரு புது விழியுடன் நோக்கும்படிச் செய்தது. விவேகமற்ற பழைய மாமூல் அனுஷ்டானங்களில் நீண்டகாலமாக மறைந்துபோன பழைய உட்பொருளையும் சீவனையும் மீண்டும் ஒரு சிறிதள வேனும் அடையப் பெறுவதற்கும், இவைகளிலிருந்து ஒரு புத்தொளியை மேலே கொணர்ந்து, பழைய உண்மை களுக்கு ஒரு புதுத்தோற்றத்தையும், பரிணமவளர்ச்சிக்கும் புதிய சிருஷ்டிக்கும் உரியனவாயும் சாத்தியமானவையாயு முள்ள புதிய சக்திகளையும் அளிப்பதற்கும் அது நமக்கு உதவி யளித்தது.

இம் முதற் பருவத்தில் நமது பழைய கலாசாரத்தை நாம் தவருகப் புரிந்துகொண்டதனல் பாதகமில்லை. வைதீக முறையில் சிந்திப்போருங்கூட ஒப்புக்கொள்ளுமாறு அதை மீண்டும் ஆராய்ச்சி செய்யும்படிக் கட்டாயப் படுத்தியது தான் மிகவும் முக்கியமான விஷயமாகும்.

### இரண்டாம் பருவம்—தேசியநோக்கு வலுவடைதல்

இரண்டாம் பருவத்தில், இந்திய புத்தியானது இப் புதிய அம்சங்கள் விஷயமாக நடந்துகொண்ட விதமும், சீர்குலைந்த தேசிய சமநிறையை மீண்டும் அடைய அது செய்த முயற்சியும், இச்சக்திகளையும் போக்குகளையும் சரியான பலன் தரத்தக்க மார்க்கங்களில் செலுத்துவதற்கு நமக்கு உதவியளித் திருக்கின்றன. எல்லாவற்றையும் ஆங்கில மயமாக்கும் பிரேரணைக்கு எதிராக தேசிய நோக்கானது கிளம்பி, வலுத்து, அதைப் பலமாக வியாபிக்க ஆரம்பித்தது. தற்கால அறிவாளிகளில் வெகு சொற்பமாயுள்ளவரும் மேன்மேலும் சுருங்கி வருபவருமான சிறு தொகையினரே இன்று மேல்நாட்டு மயமான தங்களது நோக்கை விடாது பற்றி நிற்கின்றனர். ஆனால், இவர்களுங்கூட, ஒருகாலத்தில் சாதாரணமாக நிலைத்திருந்த பழைய பொருள்களை அடியோடு இகழும் மனப்பான்மையைக் கைவிட்டனர். பலபேர்கள் தங்கள் நவீனப் போக்குடன் பழைய கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் சேர்த்துக் கொண்டிருக்கின்றனர். இந்திய விஷயங்களின் கருத்தையும் குணதிசயங்களையும் பற்றிய அவர்களது உள்ளாராய்வு இப்போது முன்னிருந்ததைவிடத் தெளிவாகவே இருக்கிறது. அவைகளின் புற அமைப்புக்குள்ளிருக்கும் உட்பொருளைத் தாராளமாக ஒப்புக்கொண்டு அவைகளுக்கு ஒரு புது வியாக்கியானம் செய்யவும் முயலுகின்றனர். முதலில், முக்கியக் கருத்து நவீன ரகமாயும், எங்கும் மேல்நாட்டிலிருந்து ஆவேசம் பெற்றதாயும் இருந்து வந்ததாயினும், அது பழைய கருத்துக்களையும் தன்னுள் சேர்த்து தன் மூலாம்சத்தில் மாறுதலடையவாரம்பித்தது. கடைசியாக, இவ்விதம் வியாபித்து வந்த அம்சமே பெருகி,

ஆதியில் இருந்த கருத்துக்களையும் நோக்கையும் தன் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்துவிடவே, இப்பொழுது சிந்தனை, சீவன், போக்கு, உருவம், எல்லாமே சகசமாகவே இந்தியமயமா யிருக்கின்றன. நமது சமீபகால இலக்கியத்தில் புதிதாகச் சிருஷ்டிக்கும் மேதையுடன் சிறப்புற்றோங்கி நிற்கும் பங்கிம் சந்திர சட்டர்ஜி, டாகுர், இவர்களின் நூல்கள் இவ் விடைக்காலத்தின் படிகளைத் தெளிவுறக் காட்டுகின்றன.

## பழமையும் புதுமையும் கலந்த புத்துருவு

இந்த இயக்கத்துடன், இதற்கு நேர் விரோதமானதும், மிகவும் விசேஷத்தன்மை வாய்ந்ததுமான ஒரு இயக்கமும் நடைபெற்று வந்தது. இது, இந்நாட்டைச் சார்ந்தது என்னும் காரணத்தினுல் பாரதநாட்டில் அது சமயம் இருந்த யாவற்றையும் பூராவாக ஒப்புக்கொண்டு அதுவே சரியெனச் சாதிக்கும் ஓர் எதிர் இயக்கமாக முதலில் ஆரம்பித்தது. அந்த பிரேரணையின் அலைகள் இன்னும் காணப்படுகின்றன. அதன் சக்திவாய்ந்த எழுச்சிகளிற் பல இன்னும் நம்மிடையே வேலை செய்து வருகின்றன. அதன் வேலை இன்னும் முற்றுப் பெறவில்லை. ஆனுல், உண்மையாகப் பார்க்கப் போனுல், இந்த எதிர் இயக்கமானது, புதிய சேர்க்கையும் அதன் சீரணமும் மிகவும் சூட்சுமமாக நடைபெற ஆரம்பித்திருப்பதையே குறிக்கிறது. ஏனெனில், இது பண்டை விஷயங்களைத் தாங்கி வருகையில், பழைய புத்திப் போக்குடையவர்களுக்கும் புதிய ஆராய்ச்சிப்போக்குடையவர்களுக்கும் திருப்தியளிக்கும் முறையிலே தனது ஆதரவு அமைந்திருக்கும்படிச் செய்ய நேரிட்டிருக்கிறது. இது பழைய வழியிலேயே திரும்பிச் செல்லும் இயக்கமல்ல. அறிந்தோ, அறியாமலோ, இது ஒரு புனர் விசா

ரணையைத் துரிதப்படுத்துகிறது. பின்னேக்கிச் செல்லும் இவ்வியக்கமானது முதிர்ச்சியடையும்போது, எல்லாவற்றையும் சேர்த்துக் கொண்டு பூரணப்படுத்தும் ஒரு மறு விளக்கத்தைத் தனது கொள்கையாக உடையதாய் விடுகிறது. இது பண்டைக் கலையின் சீவ சத்தை அடைய நாடுகிறது. இது பழைய உருவ அமைப்புக்களுக்கு மரியாதை செய்த போதிலும், அவைகளுக்குப் புத்துயிரளிக்கவும், புத்துருவு தரவும், உயிரற்றும் பிரயோசனமற்றும் உள்ளதை விலக்கிவிடவும், பழைய ஆன்ம வாழ்க்கையுடன் சேர்க்கப்பட்டு சீரணம் செய்யக் கூடியதும் அதன் வளர்ச்சியை விரிவுபடுத்தக் கூடியதுமான எப் புதிய கருத்தையும் ஒப்புக்கொள்ளவும் தயங்குவதில்லை. பழமையையும் புதுமையையும் இவ்விதம் தாராளமாகச் சமாளிப்பதிலும், புதிய அமைப்பில் பழமையைப் பாதுகாப்பதிலும், பேராற்றலுடன் விவரித்துக் காட்டுவதிலும் தமது ஜீவிய காலத்திலேயே தலை சிறந்து விளங்கியவர் சுவாமி விவேகானந்தரே யாவர்.

### கலப்படமல்ல—சொரூபத்தின் பூரணமே நமது குறி

இது தன்னைப் பொறுத்தமட்டில் புது சிருஷ்டியின் ஒரு கொள்கையை நோக்கிச் செல்லுகிறதாயினும், இதுவுங்கூட ஒரு கடைசியான குறியாக இருக்க முடியாது. இல்லையேல், சிந்தனை, போக்கு, என்னும் இவ்விரு சக்திகளும், பாதி ஐரோப்பிய ரீதியிலும், பாதி இந்திய ரீதியிலும் நாம் விசித்திரமாக உடுத்திக்கொள்ளும் ஆடையைப் போல, மனநிலையில் ஒரு பொருத்தமற்ற சேர்க்கையாக இருக்கும். பாரத நாடு ஆழ்ந்துள்ள தனது சீவனுக்கு இயற்கையான சக்தியை மீண்டும் பூரணமாகப்பெற்று, தனது தற்கால எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான

சக்திகள், குறிகள், ஆகிய எல்லாம் அந்த சீவனின் தொழிற்பாட்டினால் ஒன்று சேர்ந்து ஒன்றோடொன்று இணங்குமாறு செய்யவேண்டும். இத்தகைய உயிருள்ள புது சிருஷ்டிக்குப் புது இந்திய நுண்கலையை ஒரு சிறந்த உதாரணமாக நாம் காட்டக்கூடும். நம் தேசீய காரியங்களின் ஒவ்வொரு பகுதியிலும் புதிய சிருஷ்டி இவ்விதம் வேலை செய்ய ஆரம்பித்திருப்பதானது, இம் மறுமலர்ச்சியில் நாம் நமது உண்மையான சொரூபத்தைப் பூரணமாகக் கண்டு அடைவோம் என்பதற்கு ஓர் அறிகுறியாக விளங்குகிறது.

---

## 3. புது சிருஷ்டியின் ஆரம்ப நிலைமைகள்

நூற்காலப் போக்குகளும் முதன் முயற்சிகளும் ஒரு நிச்சயமற்ற, குழம்பிய நிலையிலிருக்கின்றன. இந்நிலையினுட் புகுந்து, புது சிருஷ்டியானது திட்டமாக இன்ன உருவங்களைத்தான் எடுத்துக்கொள்ளும் என முன்னடியாக அறிய முயலுவதனால் பயன் ஏதாகிலும் ஏற்படுமோவென்பதும் சந்தேகமே. ஒரு இசைக் கருவியில் சுருதி கூட்டுவதனால் எழும் தொனியைக்கொண்டே ஒரு பாடகன் பாடவிருக்கும் பாட்டை முன்னலேயே நிச்சயித்துவிட எவ்விதம் இயலாதோ, அவ்விதமாகவே இவ் விஷயத்திலும் ஏதாவதொரு திசையில் சில பரிஷ்காரமான குறிப்புக்களைத் தவிர வேறொன்றையும் காணமுடியாது. ஆனால், இவையும் முதற் குறிப்புக்களாகவே யிருக்கும். இவை சூசிப்பிக்கும் விஷயங்களுக்கு மேற்பட்டவை இன்னும் எவ்வளவோ மறைவாக இருக்கின்றன என நாம் உறுதியாக நம்பலாம். இவ்வுண்மையானது, சமயம், ஆத்மஞானம், சிந்தனை,

அறிவு, கவிதை, கலை, சமூகம், அரசியல் ஆகிய இவை யெல்லாவற்றிற்கும் பொருந்தும். ஆரம்பத்தின் ஆரம்ப நிலையையே நாம் அநேகமாக எங்கும் காண்கிறோம்.

## ஆத்மஞானமே சிருஷ்டியைத் தூண்டும்

ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயமாகக் காணப்படுகின்றது. அதாவது, பாரதநாட்டில், பண்டைக்காலத்தில் இருந்ததைப்போலவே எதிர்காலத்திலும் அத்தியாத்ம நோக்கு தான் உண்மையான சிருஷ்டிக்குப் பிரதான காரணமாக விளங்கும். அத்தியாத்மம் எனில், உலக வாழ்க்கையினின்றும் ஒதுங்கி, தத்துவ விசாரணையில் சஞ்சரிக்கும் மனப்போக்கு என்றோ, செயலில் ஈடுபடாது கனவு காணும் ஒரு போக்கு என்றோ நாம் பொருள்கொள்ள வில்லை. நம் கலைஞான நாகரிகங்களை விமர்சனம் செய்யும் ஐரோப்பியர்கள் யாது கூறினும், பண்டைக் காலத்தில் பேராற்றலுடனும் பெருமையுடனும் விளங்கிய பாரத அன்னையின் போக்கு அவ்விதமாக இல்லை; அவளுடைய எதிர்காலப் போக்கும் அவ்விதம் இருக்கப்போவதில்லை. அவளுடைய புத்தியின் போக்கில் தத்துவ விசாரணை என்பது சக்தி வாய்ந்த ஓர் அம்சமாக எப்போதும் விளங்கும் என்பதில் சந்தேகமே கிடையாது. அவ்வழியின் தனக்குள்ள பெரிய சக்திகளை அவள் என்றும் இழக்க மாட்டாள் என்று நாம் நம்பியிருக்கலாம். ஆனால், அவளுடைய தத்துவ விசாரணையின் இயற்கையான போக்கே வேறு.

## இந்திய தத்துவ தரிசனத்தின் இயற்கையான போக்கு

பௌதிக சாத்திர உண்மைகளைப் புத்தியினால் கற்பிக்கப்பட்ட விரிவான பொது விதிகளுக்குள் கொண்டுவரும் முறையே தத்துவம் என்னும் பெயருடன் நவ ஐரோப்

பாவில் கொஞ்சகாலம் வழங்கிவந்தது. இந்திய தத்துவ ஞானம் அதனின்று மாறுபட்டது. அவ்விதமாகவே, பிரெஞ்சுக்காரர்களின் ஆழ்ந்த, ஒளி திகழும் கருத்தின் கல்பனைகளினின்றும், ஜர்மனியின் புத்தியின் போக்கினின்றும் அது மாறுபட்டதாகும். தனது மூலாம்சத்தில் அது புத்தியின் மூலமாக ஆத்மானுபூதியை அடைவதற்கான ஒரு முயர்ச்சியாகும். பிற்காலங்களில் அது வாழ்க்கையினின்று வெகுதூரம் விலகி நின்றபோதிலும், அந்தர் ஞானத்துடன் மிளிர்ந்த ஆதி வேதாந்தத்திலும் சரி, அதன் பிற்கால வளர்ச்சிகளுள் ஒன்ருயும் புத்தறிவின் ஆற்றலுடனும் சிருஷ்டி சக்தியுடனும் இந்திய தத்துவம் விளங்கிய காலத்தைச் சேர்ந்ததாயுமுள்ள கீதையிலும் சரி, அது அவ்விதமாக இல்லை. பௌத்த சமயக் கொள்கைதான் மூதன்முதலாக வாழ்க்கையின் பயனில் உண்மையாக ஐயங்கொண்டது. ஆனல், அதுவுங்கூட தன் புத்தியின் போக்கில் மட்டுமே அவ்விதமிருந்தது. அது செய்கையில் ஈடுபட்டிருக்கையில் தன் நீதி, தருமம், அத்தியாத்ம முறைகள் ஆகிய இவற்றின் மூலமாக மானிட வாழ்க்கைக்குப் புது விதமான மதிப்புக்களேயும் அளவுகடந்த ஆற்றலையும், மிகவும் இதமான லட்சியப் போக்கையும் அளித்தது. மேலும், வாழ்க்கையின் உட்பொருளை விளக்கும் கலைகளிலும், சமூகத்திலும், அரசியலிலும் தன் சிருஷ்டிக்கும் ஆற்றலைக் காட்டியது. ஆத்ம சேதனத்தின் உண்மையைப் பிரத்தியட்சமாக அறிவதும், அதன்வழி வாழ்க்கையை இயக்குவதும் திருத்தியமைப்பதுமே இந்திய புத்தியின் இயற்கையான போக்காகும். அது ஆரோக்கியமாகவும் பெருமையுடனும் வலுவுடனும் விளங்கும் காலங்களிலெல்லாம், அது அந்த சேதனத்தின் வழியிலேயே என்றும் செல்லவேண்டியதாக இருக்கும்.

### சமயமே இயக்கங்களுக்கு ஆதாரம்

பாரத நாட்டில் வாழ்க்கையின் பேரியக்கங்கள் யாவும் ஒரு புது அத்தியாத்மக் கருத்துடனும், பெரும்பாலும் ஒரு புதுச் சமயத்தை நிறுவும் முயற்சியாகவும் ஆரம்பித்திருக் கின்றன. புதிதாக வந்த ஐரோப்பிய நாகரிகம் புத்தியை யும் பகுத்தறிவையும் அடிப்படையாகக் கொண்டது. அது பெரும்பாலும் சமய உணர்ச்சிக்கு நேர் விரோதமாயும், பதினெட்டு—பத்தொன்பதாம் நூற்ருண்டுகளில் மேன் மேலும் வியாபித்திருந்த சர்வசமபாவத்திலிருந்தும் லெளகி கப் போக்கிலிருந்தும் தனது உயர் லட்சியத்தைப் பெற்ற தாயும் இருந்துவந்தது. ஆயினும், இத்தகைய நாகரிகத் தின் ஆதிக்கமே பாரத நாட்டில் ஆரம்பத்திலிருந்தே சம யச் சீர்த்திருத்த முயற்சிகளைத் துரிதப் படுத்தியும், புதிய சமயங்களை அமைப்பதற்கு ஊக்கமளித்தும் வந்தது எனில், இதைவிட அதிசயமான விஷயம் வேறென்றுமில்லை. கருத் துக்களும் சமூகமும் புது அமைப்பு பெறவேண்டுமெனில் அப்புதுவமைப்பு அத்தியாத்மத்தை ஆதாரமாகக் கொண் டே ஆரம்பமாகவேண்டும் என்பதும், அது தொடக்கத் திலிருந்தே சமய நோக்கு கொண்டதாயும் சமய வடிவம் தாங்கியதாயும் இருத்தல் வேண்டும் என்பதுமே இந்திய புத்தியின் இயல்பாக இருந்தது.

### பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம் முதலியன

பிரம்ம சமாஜத்தை எடுத்துக்கொள்வோம். அது ஆரம்பத்தில் ஒரு விரிவான சர்வசமபாவத்துடன் விளங் கியது. சற்றேறக்குறைய எல்லா மதங்களிலுமுள்ள விஷயங்களை அது தேர்ந்தெடுத்துத் தொகுக்க முயன்றது. அது வேதாந்தத்திலிருந்து பெற்ற முதல் ஆவேசத்தை யும், ஆங்கிலேய "யூனிடேரியானிஸம்" என்னும்

கிறிஸ்துவ சமயப் பிரிவு ஒன்றில் காணப்படுவதைப் போன்ற சில புற அமைப்புக்களையும் இயல்புகளையும், கிறிஸ்துவ மதக் கொள்கையின் ஒரு சிறு அம்சத்தையும், பகுத்தறிவையும் மன அறிவையும் அதிகமாகக் கொண்டிருந்த ஒரு சமயப் போக்கையும் ஒன்று சேர்த்தது. ஆயினும், வேதாந்தத்தைப் புதிய முறையில் விளக்கும் ஒரு முயற்சியாகவே அது ஆரம்பித்தது என்பது குறிப்பிடத் தக்கது. வைதீக முறைகளை எதிர்த்துக் கிளம்பிய ஒரு இயக்கமாக அதைக் கருதலாமாயினும், அது தேசீய சம்பிரதாயத்தையும் குணவிசேஷத்தையும் ஒட்டி ஒழுகி வந்திருப்பதில்தான் அதன் முறையின் அதிசயம் இருக்கின்றது. உதாரணமாக, ஆதி இயக்கத்திலிருந்து தனித்தனியாகப் பிரிந்த மூன்று சமாஜங்களும் அதன் வளர்ச்சியின் மூன்று நிலைகளைக் குறிக்கின்றன. இம் மூன்று நிலைகளும் இந்திய சமயப் போக்கின் மூன்று சாதாரணமான அம்சங்களாகிய ஞானம் அல்லது தத்துவ ஆராய்ச்சி, பக்தி அல்லது தீவிர உள்ள நெகிழ்ச்சியுடன் கூடிய அன்பு, கருமம் அல்லது தீவிரமாக வினை புரியும் அத்தியாத்மப் போக்கு, என்பவைகளுக்கு ஒத்தனவாக இருக்கின்றன.

பாஞ்சாலத்தில் கிளம்பிய ஆரிய சமாஜமானது வேத உண்மையின் புதிய விளக்கத்தை ஆதாரமாகக் கொண்டது. அது வாழ்க்கை சம்பந்தமான பழைய வேத தத்துவங்களைத் தற்கால நிலைமைகளுக்குப் பிரயோகிக்கும் ஒரு முயற்சியாக விளங்குகிறது.

ராமகிருஷ்ண—விவேகானந்த இயக்கமானது, பண்டைச் சமயநோக்குகள், ஆத்மானுபவங்கள், ஆகிய வற்றின் ஒரு விரிவான தொகுப்பாக இருந்து வருகின்றது. அது பழைய துறவியலுக்கும் சந்நியாச சங்க முறைமைக்

கும் புத்துயிரளித்து அவைகளை மீண்டும் உறுதிப்படுத்துவதுடன், தீவிர லோகோபகாரக் கருத்தையும் மத வியாபகம் செய்யும் உற்சாகத்தையும் மேற்கொண்டு விளங்குகின்றது.

வைதீக இந்து தருமத்தை உயிர்ப்பிக்கும் ஓர் இயக்கத்தையும் காண்கிறோம். ஆனால், அது இப்போதிருப்பதை விட இருபது முப்பது வருடங்களுக்கு முன் தீவிரமாக நடந்து வந்தது.

பாரத நாட்டின் இதர பகுதிகளும் மேற்சொன்னபடி ஆங்காங்கு நடைபெற்ற பெரிய சங்கங்களின் முயற்சிகளின் அதிர்ச்சிகளை உணர்ந்தும், தங்களுடைய எல்லைக்குள்ளேயே நடைபெற்ற சிறு இயக்கங்களினால் உள்ளக் கிளர்ச்சியடைந்தும் வந்திருக்கின்றன. வங்காளத்தில் சமீபத்தில் ஒரு நவீன வைஷ்ணவ சமய இயக்கம் கிளம்பியிருக்கிறது. ஆரம்பகால சிருஷ்டியின்வேலை இன்னும் முடியவில்லை என்பதையே இது காட்டுகிறது. பாரத நாடு முழுமையிலுமே, பழைய சமயப் பிரிவுகளும் நியமங்களும் புது சீவ சக்தி பெற்றும், தங்கள் தங்களது தனித்தன்மையை வெளிப்படையாக மீண்டும் உறுதிப் படுத்திக் கொண்டும் செயலாற்றியும் வருகின்றன. இஸ்லாமிய சமயமும் சமீபகாலந்தொட்டு இப் பொது ஆரவாரத்தில் பங்கெடுத்துக் கொண்டு வருகின்றது. பலகாலமாக இந் நாட்டில் உறங்கிக் கொண்டிருந்த முஸ்லிம் மக்கள் விழிப்படைவதற்கு முன்னரும், அதன் பின்னரும், ஆதி இஸ்லாமிய லட்சியங்களை மீண்டும் உயிர்ப்பிக்கவும் புது வழிகளில் இறங்கவும் முயற்சிகள் நடந்து வந்திருக்கின்றன.

## இந்திய மறுமலர்ச்சியின் இரகசியம்

இந்திய இயக்கங்களில் எதுவேனும், அல்லது இவை எல்லாமே, நிலைபெறாமலிருக்கலாம். பண்டைப் பெரு

மையை மீண்டும் பெற்று எதிர்காலத்தை நோக்கிச்செல்லும் இந்திய அத்தியாத்மமானது தனது உண்மையான சொரூபத்தை அடைவதற்காக ஆயத்தம் செய்துகொள்ளும் வழிகளாக மட்டுமே இவையெல்லாம் இருக்கலாம். ஏனெனில், பாரதநாடு எல்லாச் சமயங்களும் ஒருங்கே சந்திக்கும் ஒரு தலமாகும். அவைகளுள் இந்து சமயம் ஒன்றே விரிவான பல அம்சங்கள் சேர்ந்த ஒரு தொகுப்பாகும். அதை அவ்வளவாக ஒரு சமயம் எனக் கொள்ளுவதற்கில்லை. பலதிறப்பட்டதாயும், ஆயினும், சூட்சுமமாக ஒன்று சேர்க்கப்பட்டதாயும் உள்ள அத்தியாத்ம சிந்தனை அனுபவம் ஆர்வம் ஆகியவற்றின் ஒரு மகத்தான தொகுதியென்றே அதைக் கூறலாம்.

இக் கிளர்ச்சிகள் கொந்தளிப்புகளி னின்றெல்லாம் முடிவாக வரக்கிடப்பது இன்னும் எதிர்காலத்தில் மறைந்திருக்கின்றது. வினைபுரிய உந்துவனவாயும், புதியனவாயும், பலன்தரத் தக்கனவாயுமுள்ள முயற்சிகள் பல காணப்படுகின்றன. பழையவடிவ அமைப்புக்களின் ஜீவசக்தி பெரிதும் உயிர்ப்பிக்கப்பட்டு வருகின்றது. ஒரு புது ஆராய்ச்சி காணப்படுகின்றது. அவ்வவ்வற்றிற்குரிய பழைய இடம் மீண்டும் அவ்வவ்வற்றிற்கு அளிக்கப்படுகின்றது. பழைய சாதனை முறைகள், பழைய பிரமாணங்கள், வேதங்கள், இவை மீண்டும் அவலம்பிக்கப்படுகின்றன. வேதம், வேதாந்தம், புராணம், யோகம், சமீபகாலந்தொட்டு, தந்திரம் ஆகிய இவை ஒவ்வொன்றும், பூரணமாக இல்லாவிடினும் ஒருமாதிரியாகவாவது, அறிந்துகொள்ளப்பட்டும் பயிலப்பட்டும் சிந்தனையிலும் வாழ்க்கையிலும் பயனளிக்குமாறு செய்யப்பட்டும் வருகின்றன. விரிவடைந்துகொண்டே போகும் உண்மையானது மேன்

மேலும் வளர்ச்சியும் பெற்று வருகின்றது. பழைய கருத்துக்கள் புது உருவம் தாங்கி, புது அனுபவங்கள் பெற்று வருகின்றன.

இவற்றின் இறுதியான முடிவு யாதாயிருப்பினும், இந்த அத்தியாத்ம முயற்சியும் சமயக் கொந்தளிப்பும் நவ பாரதத்தின் பிரதான அம்சங்களாக விளங்கிவருவது கண் கூடு. இதர துறைகளில் ஆக்கவேலையைவிட விமர்சன வேலையே சமீபகாலம் வரையிலும் அதிகமாயிருந்து வருகின்றது. ஆயினும், இத்துறையில்மட்டும் ஒவ்வொரு பிரேரணையும் முற்றிலும் சிருஷ்டிக்கும் ஆற்றல் வாய்ந்ததாகவே இருந்துவருகிறதென்பது குறிப்பிடத்தக்கது. எங்குமே ஆத்மசேதனம் வாழ்வின்மீதுள்ள பிடியைத் திரும்பப் பெற்று வருவதையும், சமுதாயத்தின் புதுவாழ்க்கைக்கு ஆத்மஞானம் மீண்டும் ஆதாரமாகுமாறு வற்புறுத்திவரும் எழுச்சி தெளிவாக இருப்பதையும் நாம் விசேஷமாகப் பார்க்கிறோம். துறவறமும் சந்நியாச சங்கமுறைமையுங் கூட, தனித்து ஒதுங்கி நின்று சிந்தனலோகத்தில் ஆழ்ந்திராமல், சமய வியாபகம், கல்வி, லோகோபகாரம் என்னும் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. சமீபத்தில், சிந்தனையாளர்களிற் சிறந்தோர் வாழ்க்கையின் அவசியத்தை சுய உணர்வுடனும் உறுதியுடனும் மேன்மேலும் வற்புறுத்தி வருவது வெளிப்படை.

இதுவே சமீப எதிர்காலத்தின் மிக முக்கியமான அறிகுறியாக விளங்குகிறது. வடிவ அமைப்புகளினின்று விடுதலையடைந்து அத்தியாத்மத்தின் ஆழங்களுக்குச் செல்லுவதிலும், அந்த அத்தியாத்மம் மீண்டும் வாழ்க்கையில் வியாபிப்பதிலுந்தான் பாரத நாட்டின் மறுமலர்ச்சியின் இரகசியம் இருக்கின்றது.

ஆனல், வாழ்க்கையைச் சமாளிக்கவும், அதை ஒரு கட்டுக்குள் கொண்டு வரவும், இந்த அத்தியாத்மமானது எத்தகைய பேராக்கமளிக்கும் கருத்துக்களையும், எத்தகைய மகத்தான, நிச்சயமான, சாதனங்களையும் கையாளக்கூடும் என்பது இன்னும் சரியாகத் தெரியவில்லை. ஏனெனில், இந் நவ இந்தியாவின் சிந்தனை இன்னும் பூரண உருவைப் பெருமலும் நிச்சயமற்றும் இருந்து வருகின்றது.

## சமயம் ஆத்மஞானத்தின் புறச்சின்னமே

சமயங்கள், சமயக்கோட்பாடுகள், சமய ஸ்தாபனங்கள் இவையெல்லாம் அத்தியாத்ம எழுச்சியின் சகசமான புறச்சின்னங்களேயாகும். சமயமானது தீவிர செயலின் மூலமாகத் தனது அந்தரங்கச் சக்தியைக் கண்டுபிடிக்கும் ஒரு முயற்சியே. அது வாழ்க்கையில் சிந்தனையை விதைக்கும்போதும், புதிய அனுபவங்களுக்கு வழி திறந்துவிடும் அதன் லட்சியங்களை புத்தி ஒப்புக்கொண்டும் சீவன் சீரணம் செய்ய முயன்று வரும்போதும், அதன் இயக்கம் விரிவடைகிறது.

## இந்திய தத்துவ ஞானம் ஆத்மஞானத்தின் சாதனமே

பாரத நாட்டில் தத்துவ ஞானமானது ஆத்ம ஞானத்தையும் ஆத்மானுபவத்தையும் வளப்படுத்தும் ஓர் அறிவுச் சாதனமாக இருந்து வருகின்றது. ஆனல், தத்துவ அறிவு இன்னும் தனது புது ஆக்கவேலையைத் திட்டமாக ஆரம்பிக்கவில்லை. அது தன் சிந்தனை, ஆர்வம் ஆகியவற்றின் வரையறைகளைப் பிரத்தியட்சமாகவும் துரிதமாகவும் விரிவுபடுத்தக்கூடிய ஒரு புதிய விளக்கத்தைச் செய்யாமல், தன் பண்டைச் செல்வங்களை மறுவிளக்கம் செய்வதிலேயே கருத்தூன்றி இருந்து வருகின்றது. ஐரோப்பிய



3590

தத்துவ ஞானத்தின் தொடர்பினுல் யாதொரு பலன் தாத் தக்க விளைவும் ஏற்படவில்லை. ஏனெனில், ஐரோப்பாவின் பழைய தத்துவங்களில் இவ்வழியில் பெரிதும் பிரயோசன மாயிருக்கக் கூடியதோ, அல்லது பாரதநாடு தன் அத்தியாத்ம இயல்புக்கும் மேதைக்கும் மிகவும் பொருத்தமான உருவங்களில் ஏற்கெனவே விளக்கியிராத முக்கியமான விஷயமோ, யாதொன்றுமில்லை. சமீபத்தில் நியெட்சே, பெர்க்ஸன், ஜேம்ஸ் என்பவர்களின் சிந்தனைகள் அங்குமிங்கும் சில சிந்தனையாளர்களின் கருத்துக்களை மிகவும் கவர்ந்திருக்கின்றனவாயினும், அவைகளின் போக்கு பெரிதும் பிராண நிலையையே பாதிப்பதாயும், மானிட லௌகிக விவகாரங்களுடன் சம்பந்தப்பட்டதாயு மிருக்கின்றது. ஆகவே, உண்மையான இந்திய தத்துவ ஞானமானது அத்தியாத்ம நாட்டத்தின் பலனுக ஏற்படும் ஆத்மானுபவத்திலிருந்துதான் விகசிக்கமுடியும். சென்ற நூற்றுண்டில் நடைபெற்ற எல்லாச் சமய இயக்கங்களும் இந்நாட்டத்தைப் பொதுவாக்க உதவியாயிருந்தன. இந்திய தத்துவம் ஐரோப்பிய தத்துவத்தைப்போல முற்றிலும் பகுத்தறிவினின்றோ, பௌதிக சாத்திரஞானம், சிந்தனைகள் ஆகியவற்றின் பயனுகவோ ஏற்படமுடியாது.

மேலும், பாரதநாட்டில் 19-ம் நூற்றுண்டில் புதிய விமர்சன சிந்தனையைத் தூண்டும் ஆற்றல் அதிகமாகக் காணப்படவில்லை. புதிதாகச் சிருஷ்டிக்கும் சக்தியைப் பெரிதும் உடைத்தாயிருந்தவர்களின் நோக்கு வெறும் இலக்கியத்தின்பால் சென்றது. அவர்கள் நூதனக் கருத்துக்களைச் சீரணிப்பதிலும் இந்திய மயமாக்குவதிலுமே கவனஞ் செலுத்தினர். இப்பொழுதுதான், இன்னுமதிகமாகச் சக்திவாய்ந்த சிந்தனையின் போக்கு ஒன்று ஆரம்

பித்து வருகின்றது. ஆயினும், இன்னும் எல்லாமே நிச்சய மற்றும், தெளிவற்ற முதற்குறிப்பாகவுமே இருக்கின்றது.

## நவ வங்க இலக்கியமும் கலையும்

இதற்கு நேர்மாருக, கவிதை, இலக்கியம், கலை, பௌதிக சாத்திரம் ஆகியவைகளில் நிச்சயமான ஆரம்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மற்ற பல துறைகளிலும் போலவே இத்துறைகளிலும், சமீபத்தில் வங்கநாடே பாரத சக்தியின் பிரதானச் சோதனைக் குகையாக இருந்து வருகின்றது. பாரத சக்தியானவள் உயிர் ததும்பும் புதுச் சக்திகளை உருப்படுத்தவும், தன் முதல் உருவங்களையும் ஆவேசங்களையும் வளர்க்கவும் அப்பிரதேசத்தையே பொறுக்கி யெடுத்திருக்கிருள். பாரதநாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் பல ஆக்கவேலைகள் நடந்து வருகின்றன. இங்குமங்கும், சிறந்த, திறமையும் மேதா விலாசமும் படைத்த, கவிகளும் எழுத்தாளர்களும் தோன்றிவருவதைக் காண்கிறோம். ஆனல், வங்காளத்தில்தான் முக்கியமானதாயும், தனிச் சிறப்பும் தனியுருவமும் கொண்டதாயும், நன்கமைந்ததாயும், விருத்தியடைந்துகொண்டே வருவதாயும் உள்ள பெருந்தொகையான இலக்கியமொன்று கொஞ்சகாலமாகவே வளர்ந்து வருகின்றது. இப்பொழுது அங்கே புதிதாகச் சிருஷ்டிக்கப்பட்டதாயும், ஞான ஆவேசம் பொருந்தியதாயும், நுண்மையான அழகும் திருஷ்டியும் கொண்டதாயும், பெருவாரியாயும் உள்ள ஒரு கலையும் தோன்றியிருக்கிறது. சிறப்புவாய்ந்த இரு விஞ்ஞானிகளும் அங்கு தோன்றியுள்ளனர். அவர்களில் ஒருவர் ஒரு புதிய விஞ்ஞான உண்மையைக் கண்டு பிடித்திருப்பதால் உலகக் கீர்த்தியடைந்திருக்கிருர். மேலும், உலக விஞ்ஞான சாத்திரத்தில் இடம் பெறத்தக்க ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள

வாலிபக் கோஷ்டியும் அங்குண்டு. ஆகவே, இந்திய மேதை எத்திசையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிற தென்பதை அங்குதான் நாம் காணக்கூடும். வங்க ஓவியர்களின் கலைத் திறனனது பங்கிம் சந்திரரின் வசனத்தையும் தாகுரின் கவிதையையும் விட விசேஷ மதிப்புடையதாக இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. வங்கக் கவிதை இன்னும் தனக்குரிய மார்க்கத்தைத் தேடிக்கொண்டும் அதை இன்னும் திட்டமாக அடையாமலும் இருந்து வருகின்றது; ஆனல், வங்கக் கலையோ, ஒரே அடியில் ஒருவிதத் தீட்சண்யமான அந்தர்ஞானத்தின் * மூலமாகத் தனக்குரிய வழியைக் கண்டுபிடித்து விட்டது.

### வங்க நுண்கலை ஒரு புதுச் சிருஷ்டி

அந்நியக் கலாசாரம் மேலோங்கியும், மக்கள் தங்களது மார்க்கத்தைக் கண்டுபிடிக்கத் தடுமாறிக்கொண்டும் நிச்சயமற்றும் இருந்து வருகையிலேயே, இப்புது இலக்கியம் ஆரம்பித்து விட்டதுதான் இந்நிலைக்கு ஓரளவு காரணமாகும். அதுசமயம் இந்திய நுண்கலையானது — அதில் அசந்தர்ப்பமான ஒரு உபநாடகமாகவும், அபத்தமாகவும், திறமையற்றதாகவும் மலடாய் நசிக்கவேண்டியதாகவுமிருந்த ரவி வர்மாவின் கலையைச் சேர்க்கவில்லை — முற்றிலும் அமைதியுற்றுக் கிடந்தது. அது தன்னுடைய சுயரூபத்தைத் திரும்பவும் அடைந்து, ஒளிபெற்று, மேன்மையடையக் கூடிய நிலையை எய்திய பின்னரே வேலைசெய்யப் புகுந்தது.

மேலும், சிற்பக் கலையே வரம்புக்கு உட்பட்டதொரு கலையாகும். அது தன் உருவ அமைப்புக்களிலும் உட்

---

* உள்ளத்தில் சுயமாகத் தோன்றும் அறிவே அந்தர்ஞானம் எனப்படுவது.

கருத்துக்களிலும், குறுகிய அளவும் பரப்புங் கொண்டது. அது இவ்விதமிருப்பதனுலேயே, கருத்திலும் அதன் வெளிப் பாட்டிலும் லாகவமானதும், நானுவிதச் சாய்வுகளைக் கொண்டதுமான இலக்கியத்தையும்விட மிகவும் தெளிவா கக் குறிப்பாலுணர்த்தும் இயல்பையுடையதாக இருக் கிறது. பொருள்களின் ரூபத்தையும் மேலாகத் தோன்றும் அவற்றின் கருத்தையும்மட்டும் வெளிப்படுத்துவதோடு நிற்காமல், அவற்றின் மறைவான உட்கருத்தையும் உயி ரையும் வெளிப்படுத்துவதையே தங்களது விசேஷ வேலை யாகக் கொண்டிருப்பதில்தான் வங்கக் கலைஞர்களின் முழு வன்மையும் உள்ளது. அவர்களின் கலை அந்தர்ஞானம் பெற்றது; அதன் உருவங்கள் அவ்வந்தர்ஞானத்தின் சந் ததமேயாகும். கூர்ந்து நோக்கியறியும் புத்தியினுல் அமைக் கப்படும் புற விதிகளை அது லட்சியம் செய்வதில்லை. அது முடிவுற்ற பொருளில் முடிவற்ற, சொல்லரிய, நுட்பங் களைக் கண்டு குறிப்பாலுணர்த்துகிறது. கேவலம் பௌதிக மயமான புற வாழ்க்கையின்மீதும் புற இயற்கையின் மீதும் தனது நோக்கைத் திருப்பி, அவைகளுக்குள் மறைந் துள்ள வேருெரு வாழ்க்கைக்கும் இயற்கைக்கும் உரிய கதிகள், வர்ணங்கள், சந்தங்கள், சொரூபங்கள் ஆகிய வற்றை வெளியே கொணர்ந்து அவற்றின்மீது பதியும் படிச் செய்கிறது. இம்முறை இந்தியக் கலையின் சநாதன மான உட்கருத்தைத் தழுவியதாயினும், இது இங்கு புது மாதிரியில் பிரயோகிக்கப்படுகிறது. இது பாவங்களை யும் இதிகாச புராணங்களையும் சூசனைக் குறிகளையும் அதிகமாகக் கொண்டிராமல், நேரான உருவில் நுட்ப மாகச் சூசிப்பித்துக் காட்டும் ஒரு முயற்சியாக விளங்கு கின்றது.

இக் கலையானது உண்மையாகவே ஒரு புது சிருஷ்டி யாகும். இவ்விதம் திறந்துவிடப்பட்ட புதிய வழியைப் பாரதநாட்டின் இதர பிரதேசங்களின் கலாமேதையும் பின்பற்றிச் செல்லுமென நாம் எதிர்பார்க்கலாம். ஆனால், இவ்விதம் பின்பற்றும்போது, அது இதர லட்சணங்களை யும் கொண்டு விளங்குமென்றும், புற வெளிப்பாட்டிற் குரிய இதர வழிகளையும் கண்டுபிடிக்குமென்றும், நாம் எதிர்பார்க்கலாம். ஏனெனில், கல்கத்தா ஓவியர்கள் கலைக் குக் கொடுத்துள்ள விசேஷ ரூபமும் பாவமும் வங்கநாட் டின் இயல்பிற்கு மட்டுமே நெருங்கிய தொடர்பை யுடை யனவாக உள்ளன. பாரதநாட்டிற்கே உரிய மதியின் ஒற்றுமையும், நாட்டிற்குள்ளடங்கிய தனிப் பிரதேசங் களின் மதியின் வளம் மிகுந்த வேறுபாடுகளும் ஒன்று சேர்ந்து பாரத அன்னையைப் பெருமிதப்படுத்துகின்றன. அவளுடைய கலைச் சிருஷ்டியின் புனருத்தாரணத்தில் இப் பெருமை பிரதிபலித்து விளங்குமென நாம் எதிர்பார்க் கலாம்.

## வங்கக் கவிதையும் இலக்கியமும்

வங்கக் கவிதையும் இலக்கியமும் இரண்டு வேறான பருவங்களைக் கடந்து மூன்றாவது பருவத்திற்குள் நுழைய ஆயத்தமாகி வருவதைப்போல் காணப்படுகிறது. இம் மூன்றாவது பருவத்தின் லட்சணங்கள் எவ்விதமிருக்கு மென நாம் இன்னும் சரியாகச் சொல்லுவதற்கில்லை. ஆரம்பத்தில், இக் கவிதையும் இலக்கியமும், ஐரோப்பிய, பெரும்பாலும் ஆங்கிலேயக், கலைகளினால் வசீகரிக்கப்பட் டும், அவற்றின் நவீனச் செய்யுள் வசன வடிவங்களையும், இலக்கியக் கருத்துக்களையும், கலைச் சிருஷ்டியின் நியதிகளை யும் அப்படியே சுவீகரித்தும் வந்தன. யதேஷ்டமாயும்

உல்லாசமாயும் சிருஷ்டித்துவந்த காலம் அது. அதுசமயம் பலதிறப்பட்ட கவிவாணர்கள் தோன்றலாயினர். அவர்களில் ஓரிருவர் மகா மேதாவிலாசம் படைத்தவர்கள். அழகும் சிறப்பும் வாய்ந்த பல சிருஷ்டிகள் உண்டாயின. உண்மையாகவே, கலைமகள் கலைக்கடலின் மடையைத் திறந்துவிட்டாள்.

இப் புது சிருஷ்டியானது வெறும் நகல் செய்யும் வேலையாக இல்லை. அன்னியக் கலையின் ஆதிக்கம் எங்குமே காணப்படுகிறது என்பது உண்மையேயாயினும், அக் கலையை இது அப்படியே நகல்செய்யவோ அல்லது அதன் ஆதிக்கத்திற்கு அடியோடு உட்படவோ இல்லை; அது ஜீரணிக்கப்பட்டு தன்மயமாக்கப்பட்டது. வங்க ஜாதியின் குணவிசேஷமும் அதற்கு இயற்கையாகவுள்ள சௌந்தரிய ஞானத்தின் போக்கும் அதைக் கையாண்டு தங்களுடைய ஜீவ சக்திக்கு உகந்த வாக்காகிய அச்சில் வார்த்துக்கொண்டன.

ஆயினும், முக்கியாம்சம் சுய ஜீவனுக்கு முற்றிலும் சகசமானதாக இல்லை. அது உள்ளீடற்றதாகக் காணப்படுகின்றது. ஆரம்பத்திலிருந்தே வங்கக் கவிதா சிருஷ்டியானது, தன் வடிவத்திலும் வெளிப்பாட்டிலும் ஒரு அதிசய வசீகரத்தையும் நுண்மையான கலையழகையும் அடைந்திருந்தது என்பது உண்மையாயினும் அது வெளிப்படுத்தின விஷயம் என்னவோ அவ்வளவு சத்துள்ளதாயில்லை. ஒருவன் சுயமாகச் சிந்தனை செய்து சுயேச்சையாகச் சிருஷ்டிக்காமல் வேறொருவனுடைய சிந்தனையையும் உருவ அமைப்பையும் ஜீரணிப்பானானால், அவனுடைய முயற்சியானது மெலிவுற்றதாயும், ஒரு கவிக்குள்ள இயற்கையான ஆற்றலிலிருந்து நாம் எதிர்பார்க்கக்கூடிய

பெருமையற்றதாயும் இருப்பது இயற்கைதானே? இதை நாம் எவ்விதம் தவிர்க்க முடியும்?

## இரு சிருஷ்டிகர்த்தர்கள்–

அந்த நிலைமை முடிந்து எத்தனையோ காலமாய்விட்டது. அதற்குரிய காலத்தை அது கடந்துவிட்டது. அதன் வேலைப்பாடு பழைய இலக்கியத்தில் இடம்பெற்றுவிட்டது. அதன் சிருஷ்டிகர்த்தர்களில் ஒருவர், அதன் வசன நடையை முதன்முதலாக மாட்சிமையுடன் உருவகப்படுத்தினர். புதிதாகப் படைக்கவல்ல மேதையும் பழுதற்ற கலைப் பிரசாதமும் அவரிடம் மிகவும் உன்னதமாகச் சேர்ந்திருந்தன. மற்றொருவர், சிருஷ்டியின் சோபை கடைசியாக மங்கலாகிக்கொண்டு வரும்போதுதான் உதித்தாராயினும், அதற்குப் பின்னும் இருந்து கவிதையின் வேறொரு ரீதியையும் மற்றுமொரு கம்பீரமான வாக்கையும் வெளிப்படுத்தினர். இவர்கள் இருவருமே வங்கத்தின் உண்மையான ஜீவனை மலர்ச்சியடையும்படிச் செய்தனர். இன்று பங்கிம் சந்திரரின் சிருஷ்டி பழமையாய்ப் போய்விட்டது; ஏனெனில், ஏனைய இலக்கியச் சிருஷ்டிகளைவிட அதிகமாக அதுவே வங்காளத்தின் நவீன அறிவை உருப்படுத்தி, ஏற்கெனவே அதனுடன் ஐக்கியமாய்விட்டது. ரவீந்திரரின் சிருஷ்டி தற்சமயம் தலைசிறந்து விளங்கிக் கொண்டிருக்கிறது. ஆயினும், எதிர்காலத்தில் தனக்கு அப்பாலும் செல்லக்கூடிய ஒரு வளர்ச்சிக்கு அது வழி திறந்துவிட்டிருக்கிறது. பாரத ஜீவன் புது உருவங்கள் தாங்கி மேன்மேலும் மறுமலர்ச்சியடைந்து வருவதை இவை காட்டுகின்றன. இவை இரண்டுமே வைகறையின் வாக்கு எனத் திகழ்கின்றன. மேலும், இவை தாம் அனுபவத்தில் காண்பதை வெளிப்படுத்துவதோடு நின்றுவிடாமல்

இன்னும் மேலே செல்லவும், தாம் உண்மையாக எழுப்பும் உணர்ச்சிகளுக்கும் நினைவுகளுக்கும் அப்பாலுள்ள விஷயங்களை விளிக்கவும் சூசிப்பிக்கவும் நாடுகின்றன.

### ஒரு புதிய சிருஷ்டி ஆயத்தமாகி வருகிறது

தற்சமயம் ஒரு புது முயற்சி ஆயத்தமாகி வருவதைக் காண்கிறோம். அது ஒரு பக்கம் தாகுரின் ஆதிக்க மண்டலத்திலிருந்து மெல்ல மெல்ல விரிந்து கொண்டும், மற்றொரு பக்கம் அதற்கு நேர் எதிராகக் கிளம்பி ஞான ஆவேசத்திலும் ஆக்கவேலையிலும் தேசியத்தன்மை இன்னும் அதிகமாக விளங்கவேண்டுமென வற்புறுத்திக்கொண்டும் வருகின்றது. இதிலிருந்து என்ன வெளிவரப் போகிறதோ இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. மொத்தத்தில் இயக்கம் என்னவோ நவீன நுண்கலை செல்லும் வழியிலேதான் போய்க் கொண்டிருக்கிறது. ஆயினும் சிந்தனையின் வாய்மொழிக்கும் சொல்லின் புற வெளிப்பாட்டுக்கும் இயல்பாகவுள்ள நானுவித நோக்கங்களும் சொல்லின் அமைவும் இதில் இன்னும் அதிகமாகவே காணப்படுகின்றன. விஷயங்களுக்கு ஒரு உறுதியான போக்கைக் கொடுக்கவல்ல மொழியை யுடைய மிக உன்னதமான மேதாவி இன்னும் தோன்றவில்லை. ஆயினும், உறுதியற்ற இவ்வாக்குகளிலிருந்துங்கூட, மகத்தான கற்பனையும் அந்தர்ஞானமும் வாய்ந்ததாயும், புது இந்திய ரகத்தைச் சேர்ந்ததாயுமுள்ள இலக்கியமொன்று உருவாகி வெளிவர இருக்கிறதுஎன்னும் ஒரு நம்பிக்கை ஏற்கெனவே மங்கலாகக் காணப்படுகிறது.

இவ்விதமாக, மன அறிவிற்குரிய விஷயங்களில் ஒரு குறுகிய எல்லைக்குள் சில நிச்சயமான ஆரம்பங்கள் ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். ஆனல், பாரத சமுதா

யத்தின் புற வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் நிலைமை இன்னும் மிகவும் நிச்சயமற்றதாயும் குழப்பமாயுமே இருக்கின்றது. இதற்குப் பெரும்பாலும் காரணமாயிருப்பன அரசியல் நிலைமைகளேயாகும். பண்டைக்காலத்தில் இருந்த ஜீவ ஓட்டம் அவைகளுக்கு இன்று இல்லை. அவை இன்னும் எதிர்காலத்தை நோக்கி முன்னேறக்கூடியவையாயு மில்லை. அலைபோல் பொங்கும் ஆர்வத்தின் ஏற்றமும், நோக்கம் நிறைவேறாமையின் வற்றமும் மாறி மாறி வருவதனால் விளையும் தாபமும் தளர்ச்சியும் சமுதாய வாழ்வில் ஒரு புதுப் பிறப்பு திடமாக அமைவதற்கு ஏற்றனவாக இல்லை. ஐரோப்பிய ராஜீயக் கருத்துக்களை அரை குறையாகச் சீரணித்து அவைகளை நகல் செய்துவந்த முதற் பருவம் முடிந்துவிட்டது. இவ்வளவுதான் நாம் தெளிவாகக் காணக்கூடிய விஷயங்கள்.

## அரசியல் விழிப்பு

பத்து வருடங்களுக்கு முன் ஏற்பட்ட இயக்கத்தின் அதிர்ச்சியினால் விழிப்புற்ற மக்களிடையே வேறொரு விதமான அரசியல் போக்கு ஏற்பட்டிருக்கிறது. அது தன் உட்கருத்தில் ஆழ்ந்த தேசீயத் தன்மை வாய்ந்ததாகும். அது தேசாபிமானத்தை ஒரு மதமாகக் கொண்டு அரசியலில் பழைய சமயக்கொள்கைகளையும் தத்துவஞானத்தையும் பிரயோகித்து வருகின்றது. நாட்டை அன்னையெனவும், சக்தி எனவும் அது வழிபடுகிறது. இந்தியமேதைக்குச் சுபாவமாயுள்ள ஆத்ம சிந்தனையையும் பிரேரணையையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு ஜனநாயகக் கருத்தை அது அமைக்க முயலுகிறது. தனது சுயவெளிப்பாட்டில் அது பல மடையாமலும் நிச்சயமற்றதாயும் இருக்கிறது. பழையகால, தற்கால நிலைமைகளுக்கு

விரோதமாகக் கிளம்புவதற்கு ஒழுங்காக முயற்சி செய்து வரினும், அது தன் ஆக்கவேலை முறைகளை முன்னேறும் படிச் செய்வதில் உடனே வெற்றிபெறவில்லை. ஆயினும் அது மக்களைத் தூண்டி எழுப்பி அவர்களுடைய அரசியல் சிந்தனைகளுக்கும் வாழ்க்கைக்கும் ஒரு திட்டமான போக்கைத் தந்திருக்கின்றது. பாரத சமுதாயமானது தனது வளர்ச்சியைத் தானே நிருணயித்துக் கொள்ள வேண்டுமென்னும் உறுதியை முற்றிலும் அடைந்து அதற்குரிய சக்தியையும் போதுமான அளவு பெற்ற பின்னரே, இவைகளின் பலாபலன்கள் புலனாகும்.

## சமூக நிலையில் பெருமாறுதல் இல்லை

பாரத சமூகம் இன்னு மதிகமான குழப்பத்தில் இருக்கிறது. சுற்றுப்புற நிலைமைகளின் இறுக்கத்ினால் பழைய அமைப்புக்கள் தவிடுபொடியாய்க்கொண்டு வருகின்றன. அவைகளின் சீவனும் மெய்ப்பொருளும் அவைகளை விட்டு மேன்மேலும் விலகிக்கொண்டிருக்கின்றன. ஆயினும், சிந்தனையும் சித்தமும் செயலற்றிருக்கின்றன. நீண்டகால சகவாசத்தின் மீதுள்ள பாசம் இன்னும் விடவில்லை. புதியது பிறப்பதற்கு இன்னும் சக்தி ஏற்படவில்லை. ஆதலின், சமூக அமைப்பின் முகப்பு மட்டும் அப்படியே நிற்கின்றது. பல விஷயங்கள் நமது கண்ணுக்குப் புலனாகாமல் மெல்ல மெல்ல அழிந்து வருகின்றன. நிச்சலனமாயிருப்பதினாலேயே பல விஷயங்கள் அப்படியே பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் சமூகத்தைச் சரியான வழியில் சீர்திருத்தியமைப்பது இன்னும் சாத்திய மில்லை.

சமூக மாறுதல் இயக்கமொன்று பலத்த கோஷங்களினிடையே ஆரம்பமானதை நாம் அறிவோம். சீர்திருத்த

நோக்கங் கொண்ட சமாஜங்களைப் போன்று சமய ஆதர வேற்பட்ட இடங்களிலேதாம் அது பலன் தரக்கூடியதா யிருந்தது. அது சில சமயம் மேல்நாட்டு உதாரணங்களை யும் லட்சியங்களையும், சில சமயம் பண்டைக்கால மேதை யையும் ரகத்தையும் தனக்கு ஆதாரவாகக் கொண்டிருந் தது. ஆனால், அத்தகைய இயக்கம் மக்களின் அந்தரங்க ஜீவனில் பதியவில்லை; குறித்த சில விஷயங்களைத் தவிர்த்து, பொதுவாக அதனிடம் உறுதியான உண்மை யில்லை. ஆகவே, அது மக்களைத் தன்னோடு இழுத்துச் செல்ல முற்றிலும் தவறிவிட்டது.

பூர்வ வைதீக நிலைமையை வலியுறுத்தி அதை உயிர்ப் பிக்கும் இயக்கம் ஒன்றும் ஏற்பட்டது. ஆனால், தனது எழுச்சியில் அது உறுதியாக நிற்கவில்லை; அது வெறும் கொள்கையாகவும் மனோபாவமாகவும் மட்டுமே நின்றது. அது வாழ்க்கையின் மகத்தான விஷயங்களுடனும் சக்திகளுடனும் தொடர்புற்றிருக்கவில்லை.

சமுதாயத்தின் ஜீவசக்தி இன்று தேசீயக் கலாசாரத் தில் வெளிப்படையாகத்தோன்றுவிடினும், உள்ளுறையாக உள்ள பொருள்களைக் கிரகித்து வருகின்றது. ஆகவே, சமூகக் கருத்துக்களும் அமைப்புக்களும் புத்துரு பெற வேண்டியதன் அவசியத்தை மக்கள் மேன்மேலும் உணர்ந்து வருகின்றனர். ஆனால், போதுமான மனவுறு தியோ, நிறைவேற்றுதற்குரிய சாதனமோ, இன்னும் ஏற் படவில்லை. தேசீய வாழ்வு இன்னும் அதிகமான சுதந்திர மடைய ஆரம்பிக்கும்போதுதான், மறுமலர்ச்சியின் சக்தி யானது சமூகத்தின் மனப்போக்கையும் விழிப்புற்ற மக் களின் வினைகளையும் தன் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வருவது சாத்தியமாகும்.

# 4. மறுமலர்ச்சியின் அடிப்படை

இந்திய மறுமலர்ச்சியானது தனது போக்கை இவ்வாறு நிருணயித்து வருகின்றதாயினும், முடிவான நிருணயம் இன்னும் ஏற்படவில்லை. அது தன் பெயருக்கு ஏற்ப, சக்தி வாய்ந்த ஒரு புது சொருபத்தில் பாரத சீவன் அடையும் ஒரு புனர்ச்சனனமாயும், பாரத அன்னையின் இயற்கையானதும் புராதனமானதுமான பிரக்ஞையின் ஒரு புத்துருவாயும் திகழவேண்டுமாயின், தான் இதுவரையில் செய்துள்ளதைவிட இன்னும் அதிகமாகவும், முடிவாகவும், பூரணமாகவும் தனது அத்தியாத்மப் போக்கை வலியுறுத்தவும், வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் தனது அத்தியாத்ம எழுச்சியை மேன்மேலும் தொழிற்படுமாறு செய்யவும் வேண்டியதாகிறது.

### வாழ்க்கையும் ஆத்ம ஞானமும் - சில தவறான எண்ணங்கள்

ஆனல், இவ்விஷயத்தைப் பற்றிய தவறான எண்ணமோ, அல்லது இதைச் சரியாகப் புரிந்துகொள்ள மறுக்கும் ஒரு மனோநிலையோ, (இவை இரண்டுமே எனலாம்) இன்னும் இருந்து வருகின்றது. ஒருவித மிதமற்றச் சமயப் போக்கும் துறவும் இதற்கு ஓரளவு காரணமாயிருந்தன. மேலும், இவ்விஷயத்தைப் பற்றிய ஒரு அவநம்பிக்கை இன்னும் கொஞ்சம் இருந்து வருகின்றது. இந்தியமேதை, வாழ்க்கை இவற்றின் சில விர்த்திகளில் உலகினின்றும் வெகுதூரம் விலகி நிற்கும் ஒரு போக்கு காணப்படுகின்ற

தல்லவா ? அப்போக்கின்மீது ஏற்பட்டுள்ள அதிருப்தி அல்லது வெறுப்பானது, இவ் அவநம்பிக்கையை இன்னும் அதிகரிக்கின்றது. ஆயினும், இவ் அவநம்பிக்கைக்குப் போதிய ஆதாரமேயில்லை; ஏனெனில், இது விவாதத்தின் உண்மையான அம்சத்தைக் கிரகிக்கவில்லை. உதாரணமாக, கலை, கவிதை, அரசியல், சமூக வாழ்க்கை இவற்றிற்கும் அத்தியாத்மத்திற்கும் உள்ள சம்பந்தம் என்ன ? கலையிலும் கவிதையிலும் ஆத்ம ஞானத்தின் வாடை அடிப்பதனுல் இவை எவ்விதம் மேன்மையடையப்போகின்றன ? இந்த அத்தியாத்ம அம்சம் சேர்ந்திருப்பதனுல் சமூகம், அரசியல் ஆகியவற்றின் நடைமுறைப் பிரச்னைகள் எவ் விதம் பயனடையப் போகின்றன ?—என்றவாறெல்லாம் சிலர் கேட்கின்றனர். நமது தேசீய வரலாற்றின் இந்நிலையில் இக்கேள்விகள் ஒரு இந்தியனிடமிருந்து வருமாயின், இவை அவனுடைய அறியாமையையே புலப்படுத்தும். இவ்விஞக்கள், உண்மையாகப் பார்க்கப்போனுல், ஒருபுறமுள்ள சமயமும் ஆத்மஞானமும், மற்ருெரு புறமுள்ள புத்தியின் அலுவல்களும் உலகவாழ்க்கையும் முற்றிலும் வெவ்வேருனவை எனவும், அவற்றை முற்றிலும் தனித் தனியாகவும் அவ்வவ்வற்றிற்குரிய தனி தத்துவங்களைக் கொண்டும் பயிலவேண்டுமெனவும் பலகாலமாக உலவி வரும் ஐரோப்பியக் கருத்தின் எதிரொலியே யாகும். மேலும், ஆத்ம ஞானமே பாரத அன்னை அடைதற்குரிய உயர்ந்த லட்சியம் எனக் கொள்ளுவதனுல், அவளைச் செயல் புரியாமலும் உலக விவகாரங்களில் ஈடுபடாமலும் இருக்கச் செய்து, பாரமார்த்திகத்திற்கே வழி காட்டுவது போலாகும். அன்றியும், கூடமானதாயும் பகுத்தறிவற்றதாயுமுள்ள ஒரு சமயப் போக்கைச் சார்ந்ததும், உலக அபிவிருத்திக்கு நேர் மாருனதும், பிற்போக்கானதுமான

ஒரு கொள்கையையே போதிப்பது போலவுமாகும். அது வன்றியும், நவீன உலகின் அதிர்ச்சிகளிலிருந்து தப்பிப் பிழைக்கவல்ல, நன்கமைந்த, ஒரு சமுதாயமாக ஆவதன் பொருட்டு நவநாகரிகத்தையும் பகுத்தறிவையும் நாம் மேற்கொள்ள வேண்டியவர்களாயிருக்க, அவளை அவ்வழிகளில் செல்லாமல் தடுத்து வருகிறோமென்னும் ஐயமும் எழக்கூடும். ஆகவே, அத்தியாத்ம தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட மறுமலர்ச்சி என்றால் என்ன ? என்பதை நாம் தெளிவுபடுத்துவது இன்றியமையாததாகும்.

## ஆத்மஞானத்தின் லட்சியம் வாழ்க்கையைத் துறப்பதன்று

அத்தியாத்ம லட்சியத்தில் அடங்காமலிருப்பன எவை என்பதை முதலில் கூறுவோம். உலகவாழ்வு அநித்திய மான ஒரு அவம் எனக்கருதி, வெகு சீக்கிரமாகவே அனைவரும் துறவறம் பூண முயலவேண்டுமென்பதோ, நமது சமூக வாழ்க்கையை மடம் குகை அல்லது மலையுச்சியில் ஒதுங்கி விடுவதற்கு நம்மைத் தயார் செய்யும் ஒரு அமைப்பாகவோ, அல்லது மேன்மேலும் வளர்ச்சியடையும் பெரு லட்சியங்கள் யாதுமின்றி இப்பூவுலகுடனும் மக்கட் கூட்டத்தின் முன்னேற்றத்துடனும் எவ்விதத் தொடர்புமில்லாத எதோ ஒரு குறியை மட்டுமே கொண்டதாயும் ஜீவ ஓட்டமின்றி தேங்குவதாயும் உள்ள ஒரு வாழ்க்கையாகவோ ஆக்கிவிட வேண்டுமென்பதோ, அதன் பொருளாகாது என்பது தெளிவு. இவை ஒரு சிறு காலம் இந்திய புத்தியின் ஒரு போக்காக இருந்திருக்கலாமாயினும், எப்போதுமே அதன் முழுப் போக்காக இருந்ததில்லை.

## சமயக் கொள்கைக்கு ஒப்ப சமூகத்தை உருப்படுத்து வதும் அத்தியாத்மமாகாது

சமுதாய ஜீவனின் முழு ரகத்தையுமே ஒரு குறித்த சமயத்தின் குறுகிய கோட்பாடுகள், கொள்கைகள், ஸ்தாபனங்கள் ஆகியவைகளுக்குத் தக்கபடி உருப்படுத்திவிடுவதும் அத்தியாமமாகாது. பண்டைச் சமூகங்கள் இவ்வண்ணம் செய்யப் பலதடவைகள் முயன்றன. பழைய மனப் பழக்கம், சகவாசதோஷம் ஆகியவற்றின் வலிமையினுல் இந் நோக்கு இன்னும் பலபேர்களிடையே நீடித்திருக்கின்றது. மிகவும் மாறுபட்ட மத அபிப்பிராயங்கள் மலிந்ததாயும், இந்து மதம், இஸ்லாமிய மதம், கிறிஸ்துவ மதம் என்னும் மூன்று தனித்தனியான மதங்களையும், இவை ஒவ்வொன்றும் ஈன்ற பலவித உட்சமயங்களையும் கொண்டதாயுமுள்ளதொரு நாட்டில், இம் முயற்சியானது, ஒரு சமயம் விரும்பத்தக்கதாயினும், சாத்தியமானதே அல்ல.

ஞானவழி ஒரு குறித்த சமயத்தைவிட விரிவானது. இன்று சமயத்தைப்பற்றி தாராளமான கொள்கைகள் பரவிவருகின்றன. இக் கொள்கைகளைக் கொண்டு நோக்கினுல், மிக உன்னதமான சமயமும் ஒரே உலக சமயத்தின் ஒரு விரிவான பிரிவு அல்லது கிளையாகவே ஆய் விடுகிறது. நித்தியமாயும், தெய்விகமாயும், பரமாத்மாவாயும், ஒற்றுமையின் ஊற்ருயும் உள்ள ஒன்றை அடையவே மனிதன் நாடுகிருன். மக்களின் வாழ்வின் மதிப்பை சநாதனமான தெய்வ மதிப்புக்களின் மட்டத்திற்கு மேன் மேலும் உயர்த்தவே அவன் முயலுகிருன். இந் நாட்டமும் முயற்சியுமே உலக சமயமென நாம் அறிவோமாக.

## ஆத்மஞானம் எதையும் தள்ளிவிடுவதில்லை

மேலும், நமது இலக்கிலிருந்து நாம் எதையும் விலக்கி விட உத்தேசிக்கவில்லை. மானிட வாழ்க்கையின் மகத்தான குறிகளிலும், நமது தற்கால உலகின் பெரும் பிரச்னைகளி லும் உள்ள எதையேனும், மனிதனின் எத்தகைய கருத்தை யேனும், வளர்ச்சி, விரிவு, மேன்மேலும் அதிகரிக்கும் ஆற் றல், மகிழ்ச்சி, ஒளி, பலம், பரிபக்குவம், ஆகியவற்றை யடைய விரும்பும் மனிதனின் பொதுவான அல்லது இயற் கையான எழுச்சியையேனும், அவ் விருப்பத்தை அடை வதற்குரிய விசேஷ சாதனத்தையேனும் விலக்கிவிடுவது நமது கருத்தாகாது. மனமும் உடலும் அற்ற ஜீவன், மானிட ரகத்தைச் சேர்ந்ததாகாது. ஆகவே, மானிடனுக்குரிய ஆத்மஞானமானது மனம், உயிர், உடல்களைச் சிறுமைப் படுத்தவோ, அவற்றைப் பயனற்றவை எனக் கொள்ளவோ கூடாது. இதற்கு நேர்மாறாக அவை மானிடனின் ஆத்ம வாழ்க்கைக்கு நிலைக்களமாகவும் சாதனங்களாகவும் இருப் பதனாலேயே, அது அவைகளை மிகவும் முக்கியமானவை எனப் பெரிதும் மதித்தல் வேண்டும். பண்டைக் கிரேக்கர் களின் சிந்தனையும், தற்கால விஞ்ஞான சாத்திரமும், மனம் உயிர் உடல்களின் சரியான வளர்ச்சிக்கும் வலிமைக்கும் மதிப்புக்கொடுப்பதைப்போலவே, புராதன இந்தியக்கலாச் சாரமும் அவைகளுக்கு மதிப்பளித்துவந்தது. ஆனால், அது அளித்த மதிப்பானது வேறொரு குறியையும் ஒரு பெருங் கருத்தையும் கொண்டதாக இருந்தது. அவ்வளவுதான். ஆகவே, அவற்றின் பூரண ஆரோக்கியத்திற்கு உரியதும், அவைகளுக்குப் பயன்படக்கூடியதுமான எல்லாவற்றிற் கும் அது முழு ஆதரவளித்தது. உதாரணமாகப் பகுத்தறிவு விஞ்ஞான சாத்திரம், தத்துவம் ஆகியவற்றின் காரியங் களுக்கும். நமது ரசஞானம் திருப்தியடைவதற்கும், சிறி

தும் பெரிதுமான பல கலைகளுக்கும், உடலின் வலிமைக்கும் ஆரோக்கியத்திற்கும், மக்களின் உயிர் வாழ்க்கைக்கும் பொருளாதாரத்திற்கும் ஆன நலன்களுக்கும், சுக வாழ்க்கைக்கும், செல்வப் பெருக்கிற்கும், பொதுவாக, ராணுவ, ராஜீய, சமூக விவகாரங்களில் மக்கள் வலிமையும் திறமையும் கொண்டு இலங்குவதற்கும், அது தனது பூரண ஆதரவையும் தந்தது. சிலர் நாம் நம்பும் வண்ணம் கூறுகிறபடி, பாரதநாட்டில், வறுமையானது ஒரு ஜாதீய லட்சியமென்றோ, வறட்சியும் தரித்திரமும் ஆன்ம வாழ்க்கைக்கு இன்றியமையாத பின்னணிகள் என்றோ, என்றும் கருதப்படவில்லை. இந்தியக் கலாசாரமும் ஆத்மஞானமும் உன்னதமான குறியுடன் இலங்கினவாயினும், அவை எழும்ப நாடிய அஸ்திவாரம் உறுதியானதாயும் விரிவானதாயுமிருந்தது. மேலும், மனம் உயிர் உடல் எனும் முதற் கருவிகளின்மீது அவை விசேஷ கவனஞ் செலுத்தின. நவ இந்தியாவும், புதிய பரந்த கருத்துக்களினால் தூண்டப்பட்டும், மிகவும் சிக்கலான நிலைகளுக்குத் தகுந்த சாதனங்களைக் கொண்டும், அதே குறியை நவீன வழிகளின் மூலமாக அடைய நாடுமென்பதில் ஐயமேயில்லை. ஆனால். அதன் முயற்சி, வினைகளின் விஸ்தாரமும், அதன் புத்தியின் இளக்கமும், நானா வகைகளும், முன்னிருந்ததைவிட இன்னும் அதிகமாகவே இருக்கும். ஆத்மஞானம் எல்லாவற்றினின்றும் விலகிக்கொண்டு தனித்திருக்கவேண்டுமென்னும் நியதியில்லை; அது எல்லாவற்றையும் தன்னுள் அடங்கியதாக இருக்கக்கூடும்; தனது நிறைவில் அது அவ்விதமாகவே இருக்கவேண்டும்.

## ஆயினும் அதன் நோக்கே வேறு

ஆயினும், வாழ்க்கையைப் பற்றிய அத்தியாத்ம நோக்கிற்கும் வெறும் லௌகிகமான நோக்கிற்கும் பெரு வித்

நியாசம் உண்டு. அத்தியாத்ம நோக்கின்படி, மனம், உயிர், உடல்கள் மனிதனின் கருவிகளே யல்லாமல் அவனுடைய குறிகளல்ல. அவை அவனுடைய இறுதியான, மிக உன்னதமான, சாதனங்களாகவும் இல்லை. அத்தியாத்மம் அவற்றை மனிதனின் புற ஜீவனுக்குரிய காரணங்கள் எனக் கருதுவதன்றி முழு ஜீவனாகக் கொள்ளுவதில்லை. அது முடிவுள்ள பொருள்கள் எல்லாவற்றிலும் மறைவாக உள்ள முடிவற்ற பொருளைக் காண்கிறது. அம் முடிவற்ற பொருளின் உயர்மதிப்புக்களைக்கொண்டே அது முடிவுள்ள பொருள்களின் மதிப்புக்களை நிர்ணயிக்கிறது. ஏனெனில், முடிவுள்ள பொருள்கள் முடிவற்ற பொருளின் அபக்குவமான ரூப மாறுதல்களாக இருப்பதோடு, அதன் உண்மையான சொரூபத்தை வெளிப்படுத்தவே சதா முயன்றுகொண்டிருக்கின்றன. அத்தியாத்மமானது தேகாதிப் பிரபஞ்சத்திற்கு மேலானதொரு மெய்ப்பொருளை, மனிதனுக்கும் உலகுக்கும் பின்புறமாக மட்டுமன்றி, அவர்களுக்குள்ளேயும் காண்கின்றது. மனிதனுக்குள்ளேயுள்ள இந்த ஆன்மாவே, இந்தத் தெய்விகப் பொருளே, எல்லாவற்றிலும் முக்கியமானதென்றும், அவனிடமுள்ள மற்றவையெல்லாம் இதையே எவ்விதத்தாயினும் புறத்தில் வெளிப்படுத்த முயலவேண்டும் என்றும் அது கருதுகிறது. பிரபஞ்சத்தில் வியாபித்துள்ள இவ் வான்மாவையே, இத் தெய்விக சாந்நித்தியத்தையே, மனிதன் எல்லாத் தோற்றங்களிலும் கண்டு, உணர்ந்து, தனது சிந்தனையையும் வாழ்வையும் அத்தோடு ஒன்றுபடுத்தவும், அதிலேயே தனக்கும் இதர மனிதர்களுக்கும் உள்ள ஒற்றுமையைக் காணவும் வேண்டுமென்று கருதுகின்றது. இந் நோக்கு, விஷயங்களைப்பற்றிய நமது சாதாரண நோக்கை முற்றிலும்

மாற்றிவிடுகின்றது. ஆத்மஞானமானது மானிட வாழ்க்கையின் எல்லாக் குறிகளையும் பாதுகாக்கும்போதும், அக்குறிகளுக்கு வேறொரு பொருளையும் போக்கையும் தருகின்றது.

## உடல் உயிர் மனம் அதன் கருவிகளே

நாம் தேக ஆரோக்கியத்தையும் வலிமையையும் பெற விரும்புகிறோம். ஆனால், அது எதற்காக? அவை அடைதற்குரியனவாதலால் அவைகளின் பொருட்டே விரும்புகிறோமெனவோ, அல்லது நீடுழி வாழ்வதற்கும், நமது புத்தி, பிராணன், உள்ள நெகிழ்ச்சிகள் ஆகியவை திருப்தியடைவதற்கும், அவை ஒரு சரியான ஆதாரமாயிருப்பதன்பொருட்டு அவைகளை விரும்புகிறோமெனவோ, நாம் சாதாரணமாக விடை பகரக்கூடும். அவற்றை அவற்றின் பொருட்டே விரும்புகிறோமென்பது ஓரளவு உண்மையே. ஆனால், பூதவுடலுங்கூட சித்பொருளின் ஒரு மலர்ச்சியாக இருப்பதனாலும், அதுவும் பரிபூர்ண மானிடவாழ்க்கை நெறியின் ஓர் அம்சமாயிருப்பதனாலும், அதன் பரிபக்குவமும் அடைதற்குரியது என்னும் அருத்தத்திலேதான் அதை நாம் விரும்புகிறோம். மேலும், மனிதனிடத்திலுள்ள தெய்வாம்சத்தைக் கண்டுபிடித்து, அதைப் புறத்தே விளங்கச்செய்யும் எல்லாப் பெருமுயற்சிக்கும் அது ஆதாரமாய் நிற்பதனாலேயே, அதன் மதிப்பு அதிகமாகிறது. “சரீரம் கலுதர்ம சாதனம்”, அதாவது உடலும், இறைவனை நோக்கிச் செல்லும் பாதையில் நமது சுயதர்மத்தை நிறைவேற்றுவதற்குரிய ஒரு சாதனமாகும் என்பது வடமொழியின் முதுமொழியாகும். மன அறிவு உள்ள நெகிழ்ச்சி, அழகுணர்ச்சி ஆகியவை மனிதனின் நுண்மையான இயல்பைச் சார்ந்தவையாதலாலும், அவ

னுக்கு அதிக உற்சாகத்தையும் நிறைவையும் அளிப்ப தாலும், இவற்றிற்குரிய உறுப்புக்களை விருத்தி செய்ய வேண்டுமென்பது ஒரு சாதாரணக் கருத்தாகும். இது அவசியமேயாயினும், இதுமட்டும் போதாது; ஏனெனில் இவ்வுறுப்புக்களுங்கூட சித் பொருளின் புறவெளிப்பாடுக ளாகவும், மனிதனிடத்தில் தங்களது தெய்வாம்சத்தை யடைய நாடும் பொருள்களாகவும் இருக்கின்றன. இவை களின் வளர்ச்சியினாலும், இவைகளின் நுட்பம், அமைவு, வலிமை, தீவிரம் முதலியவைகளினாலும், மனிதன் உலகின் கண்ணுள்ள தெய்விக மெய்ப்பொருளை அண்டவும், பல வழிகளில் அதை உடைமைப்படுத்தி இறுதியில் தனது வாழ்க்கை முழுவதையும் அத்துடன் இணைத்து ஐக்கியப் படுத்தவும் முடிகிறது.

## ஒழுக்கமும் ஒரு சாதனமே

சாதாரண நோக்கில், அறம் அல்லது ஒழுக்கம் எனப் படுவது தனி மனிதனுடையவும் சமூகத்தினுடையவும் ஒழுங்கான நடத்தை அல்லது ஆசாரமேயாகும். இந்த ஆசாரமே சமூகத்தை நிலை நிறுத்துகிறது. இதுவே மக்கள் தங்கள் பரஸ்பர விவகாரங்களில் இன்னுமதிகமான பகுத் தறிவு, நிதானம், அனுதாபம், தன்னடக்கம் ஆகிய இவற் றுடன்ஒழுகுவதற்கு வழிகாட்டுகின்றது. ஆனல், ஆத்ம ஞான நோக்கில் அறநெறியென்பது இதைவிட மேலானது. அது நமது கருமத்திலும், இன்னும் விசேஷமாக நமது சீவ னின் இயல்பிலும், நமக்குள்ளே உறையும் தெய்வாம்சத்தை வளர்ப்பதற்குரிய ஒரு கருவியாகவும், நாம் இறைவனது இயற்கையில் ஒன்றி பரிணமிப்பதற்கு ஒரு படியாகவும் விளங்குகின்றது.

## தத்துவமும் பௌதிக சாத்திரங்களும் அதற்குச் சாதனங்களே

நமது குறிகள் வினைகள் எல்லாமும் இவ்விதமாகவே உள்ளன. ஞானவழி எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு அவைகளுக்கு இன்னும் விரிவான, தெய்வீகம் மிகுந்த, அந்தரங்கமான, பொருள் ஒன்றைத் தருகின்றது. மேல் நாட்டு முறைப்படி, தத்துவம் என்பது வாழ்க்கையின் பிரதம உண்மைகளைப் பகுத்தறிவின் ஒளியைக் கொண்டு சமபுத்தியுடன் ஆராய்ச்சி செய்வதேயாகும். இவ்வுண்மைகள் விஞ்ஞான சாத்திரம் நமது பார்வைக்குக் கொண்டுவரும் விஷயங்களை உற்று நோக்குவதனாலேனும், பகுத்தறிவின் ஊகங்களைக் கவனமாயும் தர்க்க ரீதியிலும் சோதனை செய்வதனாலேனும், அல்லது இவை இரண்டுமே சேர்ந்த ஒரு முறையினாலேனும் பெறப்படுகின்றன. ஆனால் அத்தியாத்ம நோக்கின்படி, வாழ்க்கையின் உண்மையானது பகுத்தறிவினாலும், சாத்திர முறையில் விஷயங்களை உற்று நோக்குவதனாலும் அன்றி, அந்தர் ஞானத்தினாலும் அக அனுபவத்தினாலும் பெறலாகும். ஞானம் பெறுதற்குரிய பலதிறப்பட்ட சாதனங்கள் யாதொன்றையும் விடாமல், அவையெல்லாவற்றினின்றுமே கிடைக்கப்பெறும் மூலப் பிரமாணங்களை ஒழுங்குபடுத்தி, அவற்றை ஒரே உன்னதமான, அகிலத்தையும் தழுவிய, மெய்ப்பொருளுடன் சேர்த்துச் சம்பந்தப்படுத்துவதே, அதன்படி தத்துவத்தின் தொழிலாகும். கடைசியாக, மனிதன் அத்தியாத்ம அனுபவம் அடைவதற்கும், தனது தெய்வ இயற்கையுடன் ஒன்றுபட்டு விகாசமடைவதற்கும் ஒரு ஆதாரத்தை ஆயத்தம் செய்வதில்தான் தத்துவத்தின் உண்மையான பலன் இருக்கிறது. இந்த நோக்கில், விஞ்ஞான சாத்

திரளுங்கூட, பிரபஞ்ச சேதனத்தையும் அது பொருள்களில் தொழிற்படும் விதத்தையும்பற்றி இன்னும் அதிகமாக விளக்கக்கூடிய ஒரு உலக அறிவாய்விடுகிறது. அது பௌதிகஞானத்தையும் அதன் அனுபவ பலன்களையும் பற்றிய ஒரு சாத்திரமாகவோ, சடம் அல்லது சக்தியே நமது ஆரம்பநிலை என்னும் கொள்கையை ஆதாரமாகக் கொண்டு மனிதன், மனம், உயிர் இவற்றை விளக்கும் ஒரு அறிவியலாகவோ இருப்பதுடன் நின்றுவிடுவதில்லை. ஏனெனில், அத்தியாத்ம வாடை வீசும் அறிவுப் பயிற்சியானது, சேதனமே பிரதம உண்மையென ஆரம்பித்து, மனத்திற்கும் மனத்திற்கு மேம்பட்ட நிலைக்கும் சடத்தையும் உயிரையும் தங்களது ஆதிக்கத்திற்குள் கொண்டுவரும் ஆற்றலுண்டு எனக் கண்டுபிடிக்கும் புதிய ஆராய்ச்சித் துறைகளுக்கும், பழையனவும் புதியனவுமான பௌதிக சாத்திரங்களுக்கும் அவற்றின் விளை பயன்களுக்கும் தாராளமாக இடமளிக்கிறது.

### கலை, கவிதை, சமூகம், அரசியல் எல்லாமே அதற்குச் சாதனங்களாகின்றன

அழகு உணர்ச்சியைத் திருப்தி செய்யும் வகையில் மனிதனையும் இயற்கையையும் சித்திரிப்பதும், வாழ்க்கையைப்பற்றி மன அறிவு கொள்ளும் கருத்துக்களையும், கற்பனை கொள்ளும் பாவனைகளையும் அழகாக உருப்படுத்துவதுமே கலை கவிதைகளின் புராதன லட்சியமாகும். ஆனால், அதியாத்ம நோக்கு கொண்ட கலைப்பயிற்சியில், மனிதனிடத்திலும் இயற்கையிலும் மறைந்துள்ள மகத்தான விஷயங்களையும், எங்கும் நிறைந்துள்ள, மிக மிக ஆழ்ந்த சேதன மயமான அழகையும் வெளிப்படுத்துவதே அவைகளின் லட்சியமாய்விடுகிறது.

மானிடவாழ்க்கையின் முதலமைப்பில், அரசியலும் சமூகமும் பொருளாதாரமும், மக்கள் சேர்ந்து வாழ்வதற்கும், தங்கள் தேவைகளை உற்பத்தி செய்வதற்கும், விருப்பங்களைப் பூர்த்திசெய்து கொள்ளுவதற்கும், இன்பம் எய்துவதற்கும், மனம் உயிர் உடல்களின் திறம் வளர்ச்சியடைவதற்குமாக அமைத்துக்கொண்டதோர் ஏற்பாடாகவே இருந்தன. ஆனால், ஆத்மஞான லட்சியமானது இவைகளை இன்னும் விரிவான நோக்கங்கொண்டவையாகச் செய்கின்றது. முதலாவதாக, மனிதன் வாழ்க்கையிலிருந்துகொண்டே தன் உண்மையான சீவனையும் கடவுட்டன்மையையும் அறிவதற்கும், அவ்வறிவினால் மலர்ச்சியடைவதற்கும் உரிய ஒரு நிருமாணமாக அவைகளை அது ஆக்குகிறது. இரண்டாவதாக, வாழ்க்கையில் இறைவனின் சுயதருமத்தின் சொரூபமாக அவை மேன்மேலும் விளங்கும்படிச் செய்கின்றது. மூன்றாவதாக, மக்களினம் முழுமையுமே அடைய முயன்றுவரும் தனது தெய்வ சுபாவத்தையும், அதற்குரிய ஒளி, வலிமை, அமைதி, ஒற்றுமை, சமரசம் ஆகியவற்றையும் நோக்கி ஒரு கூட்டமாக முன்னேறும்படி அது செய்கின்றது. ஆத்மஞானப் பயிற்சியைப் பற்றியும் வாழ்க்கையின் நடைமுறையில் ஆன்ம ஞானத் தத்துவங்களைப் பொருத்துவதைப் பற்றியும் நாம் பேசும்போது, மேற்சொன்னவைகளில் அடங்கி இயலக்கூடியவையாய் இருப்பனவே நமது கருத்தில் இருக்கின்றன. அவைகளுக்கு அதீதமாகவோ குறைவாகவோ இருப்பன அல்ல.

## கீழ்நாட்டுக் கலைகளின் ஒளி ஐரோப்பாவிலும் வீசி வருகின்றது

இந்த லட்சியத்தைப் புரிந்து கொள்ளாமலோ அல்லது இதன்மீது நம்பிக்கை வைக்காமலோ இருப்பவர், வாழ்க்

கையைப்பற்றி ஐரோப்பியர் கொண்டுள்ள மனோபாவனை யின் ஆட்சிக்கு இன்னும் உட்பட்டிருக்கின்றனர். இவ் வாட்சியானது கொஞ்சகாலம் பாரத சீவனை அடியோடு அமுக்கிவிடும்போலிருந்தது. ஆனால், கீழ்நாட்டுக் கருத் துக்கள் விரைவாக வியாபித்து வருவதன் பயனாக, ஐரோப் பாவுங்கூட தன் சொந்த கருத்துக்களின் பந்தங்களினின்று விடுதலை யடைந்து வருகின்றது என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். இக் கீழ்நாட்டுக் கருத்துக் களின் முக்கியாம்சங்கள் (அவற்றின் புற வடிவங்களல்ல) முதலில் வடிகட்டினதைப் போலத் துளித்துளியாகவும், தற்சமயம் தாராளமாகவும் மேல்நாட்டுச் சிந்தனை, கவிதை, கலை, வாழ்க்கையைப்பற்றிய கருத்துக்கள் ஆகியவற்றி னுள் பரவிவருகின்றன. ஆனால், அவை மேல்நாட்டுக் கலா சாரத்தைக் கவிழ்ப்பனவாக இல்லை. அதன் விழுமிய நலன் களை உருமாறும்படிச் செய்வனவாயும், விளங்கவைப்பன வாயும், பெருக்குவனவாயும், பலகாலமாக அசட்டை செய்யப்பட்டும் மறக்கப்பட்டும் வந்த அம்சங்களைப் புதிதா கச் சேர்ப்பனவாயுமே இருக்கின்றன. ஐரோப்பா, தான் கிரகிக்க முடிந்த இப்புது ஒளியைக்கொண்டு இவ்வண்ணம் தன்னை விவேகத்துடன் விரிவுபடுத்தியும், சேதனத்தின் உண்மைகளையும், மனிதனும் அவனுடைய வாழ்க்கையும் தெய்விக உருமாறுதலை யடையவேண்டுமென்னும் குறி யையும் ஒப்புக்கொண்டு வரும்போது, இந்தியராகிய நாம் ஐரோப்பியரின் சிந்தனை, வாழ்க்கை, இவற்றின் கழிசல் களை ஏற்றும், அவர்கள் நேற்று கழிந்ததை இன்று நாம் மேற்கொள்ளும் ரீதியில் அவர்களுடைய பழைய வழியில் சென்றும் வழி தவறி அலேவோமாயின், அது விசித்திர மாகவே இருக்கும்.

## நமது தற்கால பலவீனம் நமது கலாசாரத்தின் தாழ்வைக் காட்டுவதாகாது

எல்லா நாகரிகங்களும் ஒரு காலத்தில் வலிகுன்றி க்ஷீணதசை அடைவதுண்டு. அதைப்போலவே நாமும் பல வீன மடைந்திருந்த சமயத்தில்தான், தற்செயலாக ஐரோப்பியர் வந்து நம்மீது ஆதிக்கஞ் செலுத்தலாயினர். தற்செயலாக ஏற்பட்ட இந்த நிகழ்ச்சியினால் தனிப் பண்புடைய நமது கலாசாரம் சீரழியுமாறு நாம் விட்டுவிடலாகாது. பெரு விபத்தாகவந்த சென்ற மகாயுத்தமானது, ஐரோப்பாவின் பௌதிக சாத்திரம், ஜனநாயகம், அபிவிருத்தி, ஆகிய இவையாவுமே தவறான போக்குடையவை என்றும், அவள் இடைக்கால நாகரிகத்திற்குத் திரும்பிச் செல்லவோ, அல்லது சீன, துருக்கிய அல்லது தீபேத்திய கலாசாரங்களை நகல்செய்யவோ வேண்டுமென்றும் நிரூபித்து விட்டதாக நாம் எவ்விதம் கூறமுடியாதோ, அவ்விதமாகவே, நாம் அடைந்துள்ள க்ஷீணதசையானது, நமது ஆத்மஞானம், கலாசாரம், பிரதான கருத்துக்கள் ஆகிய இவையாவும் முற்றிலும் தவறான போக்குடையவை யென்றும், ஏதோ கொஞ்சம் அத்தியாத்மத்தையும் மதத்தையும், பாரதநாட்டின் தனிப்பண்பையும் ஒரு அழகான பின்னணியாகமட்டும் வைத்துக்கொண்டு வாழ்க்கையின் சாதாரண அனுபவங்கள் யாவற்றிலும் ஐரோப்பிய முறைகளைத் திடமாகக் கடைப்பிடித் தொழுகுவதும், பகுத்தறிவையே பிரதானமாகக் கொள்ளுவதும் உலக சுகங்களிலேயே தோய்ந்திருப்பதுமே இனி நாம் அதிகப்படியாகச் செய்யக் கூடியவையெல்லாம் என்றும் நிரூபித்து விட்டதாகக் கூற முடியாது. அவ்வண்ணம் பொதுவாகவும் சுலபமாகவும் முடிவுகட்டி விடுவதானது, அறிவும் நிதானமும் ஆராய்வு மற்ற ஒரு அபத்தமான செயலாகும்.

## பூரண நிறைவுக்குப் பழமையும் புதுமையும் கலப்புறவேண்டும்

நாம் குற்றங்கள் செய்துள்ளோம். நமது லட்சியங்களை உண்மையாகப் பயன்படுத்துவதில் தடுமாறியுள்ளோம். சில விஷயங்களைச் சுகக்கேடான வழியிலும் மிகைப்படவும் நாம் செய்ய நேர்ந்ததுண்டு.

ஐரோப்பாவும் பல தவறுதல்களைச் செய்துள்ளாள். அவள் மகாயுத்தத்தினு லேற்பட்ட படிப்பினையையுணர்ந்து தன்னைச் சீர்படுத்திக்கொள்ள முயன்று வருகிறுள். ஆனுல், அதன்காரணமாக, விஞ்ஞான சாத்திரத்தையோ, ஜனநாயகத்தையோ, அபிவிருத்தியையோ அவள் விலக்கி விடவில்லை; அவைகளைப் பூரணப் படுத்தவும், இன்னும் நன்ருக உபயோகிக்கவும், இன்னும் ஒரு சரியான போக்கில் செலுத்தவுமே கருதுகிருள். அவள் தன் சொந்த வாழ்க்கையையும் சிந்தனு முறையையும் ஆதாரமாக வைத்துக்கொண்டே கீழ்நாடுகளின் கலைஞானங்களுக்கு இடமளிக்கிருள். தன் சொந்த வாழ்க்கையின் உண்மையையும், விஞ்ஞான சாத்திரத்தையும், சமூக லட்சியங்களையும் கைவிடாமலே சேதனத்தின் உண்மைக்குத் தன் உள்ளத்தைத் திறக்கிருள்.

நாமும் பாரத சீவனின் விஷயமாகவும், நவீன சக்திகளின் விஷயமாகவும், அதே விதமான உண்மையான நம்பிக்கையுடனும், சுயேச்சையுடனும் நடந்துகொள்ள வேண்டும்; நம்மிடையே ஏற்பட்டுள்ள பிழைகளைத் திருத்திக்கொள்ளவேண்டும்; நமது ஆத்மஞானத்தை விரிவான, தாராளமான, வழிகளில் செலுத்தவும், கூடுமானுல், நமது முன்னேர்களையும்விட இன்னுமதிகமாக ஆத்மஞான மார்க்

கத்தில் முன்னேற்றமடையவும் வேண்டும்; மேல்நாட்டு விஞ்ஞான சாத்திரம், பகுத்தறிவு, முன்னேறும் இயல்பு, இன்றியமையாத நவீன கருத்துக்கள் ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளவேண்டும். ஆனல், நமக்குரிய வாழ்க்கை முறையை ஆதாரமாகக் கொண்டும், நமது ஆத்மீக நோக்குடனும் லட்சயத்துடனும் இவற்றைச் சேர்த்துச் சீரணித்து விடவேண்டும். உயிரின் துடிப்புக்கும் உலக விவகார சம்பந்தமான வினைகளுக்கும், நவீனப் பெருமுயற்சிகளுக்கும் நமது உள்ளத்தைத் திறக்கவேண்டும். ஆனல், இறைவன், மனிதன், இயற்கை இவை விஷயமான நமது மூலாதாரக் கொள்கையை மட்டும் நாம் கைவிடலாகாது. மேலே சொன்ன விஷயங்களுக்குள் உண்மையாக எதிர்ப்பு அல்லது போராட்டம் கிடையாது; ஏனெனில், இவை ஒவ்வொன்றுக்கும், தன்னை நிறைவு படுத்திக்கொள்ளவும், உள்ளடங்கியுள்ள தன் சொந்த பாவங்களைக் கண்டறியவும், வளமும் நிறைவும் மிகுந்த உட்கருத்துக்களைக் கிரகிக்கவும் மற்றதன் உதவி இன்றியமையாததாகிறது.

### சுயதருமத்தைக் காக்கப் புது ஒளியைத் தள்ளிவிட வேண்டியதில்லை

பாரதநாடு தனது சிறப்பியல்பில் ஊன்றி நிற்பதாலும் தனது சுயதருமத்தின்படி ஒழுகுவதாலுமே, தான் மேலான அபிவிருத்தியை யடைவதோடு மக்களினத்திற்கும் சேவை புரியக்கூடும். அப்படியெனில், சிலர் அறிவின்றியும் குறுகிய நோக்குடனும் கொள்வதைப்போல, கால வெள்ளத்தில் அடித்துக்கொண்டு நமக்கு வருவனவாகவோ, அல்லது தற்செயலாக முதலில் மேல்நாட்டினரால் விருத்தி செய்யப்பட்டு வலிமையுடன் வெளிப்படுத்தப்பட்டனவாகவோ உள்ள புது விஷயங்களை யெல்லாம்

விலக்கிவிட வேண்டுமென்பது பொருளல்ல. அவ்விதம் பொருள்கொள்வது அபத்தமும், மதியீனமுமாகும்; அது இயற்கையில் நடவாது; ஆத்மஞானத்திற்கும் ஒவ்வாது. ஏனெனில், உண்மையான ஆத்மஞானம் புது ஒளியையோ மானிட அபிவிருத்திக்குறிய புதிய சாதனங்களையோ பொருள்களையோ தள்ளி விடுவதில்லை. நமது மூல தத்துவமாயும், ஜீவனின் முக்கியமான போக்காயும், உடன் பிறந்த இயல்பாயு முள்ளதைப் பாதுகாத்து, புறத்திலிருந்து வருவனவற்றை அதனுடன் சேர்த்துச் ஜீரணம் செய்து தன்மயமாக்கி, தான் செய்வனவும் சிருஷ்டிப்பனவும் யாவும் அதினின்றுமே பரிணமிக்குமாறு செய்ய வேண்டுமென்பதே அதன் பொருளாகும்.

**அதீத சமயப்போக்கே நமது வீழ்ச்சிக்குக் காரணமல்ல**

சமயமே பாரதநாட்டு மக்களின் மனத்தை விசேஷமாகக் கவர்ந்து வந்திருக்கின்றது. வாழ்க்கையை எல்லாமே சமயமாகவும், சமயமே நமது வாழ்க்கையெல்லாமாகவும் நாம் செய்துவிட்டோமாதலால், வாழ்க்கையின் விவகாரங்களில் தோல்வியுற்று இழிநிலை யடைந்துள்ளோம் என்றும், இந்த அதீதச் சமயப் போக்கே பாரத நாட்டின் அழிவுக்குக் காரணமென்றும் சிலர் நமக்கு எடுத்துக் காட்டியுள்ளனர். இதற்குப் பதிலுரைக்கும் வகையில், சற்று வேறானதொரு சந்தர்ப்பத்தில் ஒரு கவி கூறியுள்ள வண்ணம், நமது வீழ்ச்சி பிரமாதப்படுத்தப்பட வேண்டிய விஷயமல்லவென்றும், பாரதத்தாய் வீழ்ந்து கிடக்கும் மண்கூட புனிதமானதென்றும் நான் சொல்ல மாட்டேன். நமது வீழ்ச்சியும் தோல்வியும் பொருட்படுத்துதற்குரிய விஷயங்களேயாகும். மண்ணில் வீழ்ந்து கிடப்பது ஒரு மனிதனுக்கோ ஒரு சமுதாயத்திற்கோ

திருப்திகரமான நிலைமையாகாது. ஆனால், இந்நிலைமைக்குச் சாட்டப்படும் காரணந்தான் உண்மையானதல்ல. பாரத மக்களிற் பெரும்பாலோர் தங்களது வாழ்க்கையெல்லாமே சமயமென உண்மையாகப் பொருள்படும்படிச் செய்திருப்பார்களாயின், அவர்கள் இன்றுள்ள நிலைமைக்கு வந்திருக்கவேண்டியதே இல்லை. அவர்களது பொதுவாழ்க்கை சமயத்திற்கு நேர் விரோதமாயும், அகந்தையுற்றதாயும், சுயநலம் ஒன்றையே நாடுவதாயும், லோகாயத் நோக்குடையதாயும் ஆனபடியால்தான் அவர்கள் வீழ்ந்தனர். ஒரு பக்கம் புறச்சடங்குகள், விதிகள், மாமூல்முறைகள், உயிரற்ற ஆராதனைகள் இவைபோன்ற சமயப் போக்குகளில் நாம் வெகுதூரம் வழிதவறிச் சென்றிருக்கலாம். மற்றொருபக்கம் உலகத்தை மிகவும் வெறுக்கும் ஒரு துறவறத்தை நாம் அதீதமாக மேற்கொண்டிருக்கலாம். மகாமேதை படைத்தவர்கள், பண்டைக்கால ரிஷிகளைப்போன்று சமூகத்திற்கு ஆத்மஞானத்தின் ஆதரவையும் ஒளியையும் சீவனையும் அளிக்காமல், சமூகத்தினின்றும் அடியோடு விலகிக் கொண்டதற்கு இக்கடுந்துறவே காரணமாயிருந்தது. ஆயினும், ஆத்மஞானத்தின் தூண்டுதல் பொதுத்தன்மையிலும் பரப்பிலும் தன் வலியிழந்துவிட்டதும், அறிவின் தொழிற்பாடும் சுதந்திரமும் க்ஷீணித்து விட்டதும், பெரு லட்சியங்கள் மறைந்துவிட்டதும் வாழ்வின் சுவை அற்றுவிட்டதுமே நமது வீழ்ச்சிக்கு மூலகாரணங்களாகும்.

## உண்மையான சமயம் நம்மிடையே அதீதமாயில்லை

ஒரு அருத்தத்தில் நம்மிடையே சமயம் அதிகமாயிருந்திருக்கலாம். 'ரெலிஜன்' என்னும் ஆங்கிலச் சொல்லில் சமயக் கோட்பாடுகள், சடங்குகள், பக்தியைப் புறத்தே

காட்டும் வழிகள் இத்தகைய புற விஷயங்களின் வாடையே அதிகமாக அடிக்கிறது. இந்திய மொழியில் இதற்குச் சரியான ஒரே சொல் இல்லை. ஆனால், சமயம் (Religion) என்னும் சொல்லுக்குப் பரிபூரண ஆன்மசேதனத்தின் தூண்டுதலின் வழி செல்லுவது என்னும் பொருளைக் கொடுத்து, நமது மிக உன்னதமான சீவனை, தெய்வத் தன்மையை, எல்லாவற்றையும் தழுவும் ஒற்றுமையைக் கண்டறிந்து, அதில் வாழவும், வாழ்க்கையில் எல்லா அம்சங்களையும் மிக உன்னதமாய் விளங்கக்கூடிய தெய்வ மதிப்புக்களுக்கு உயர்த்தவும் முயலுவதே ஆத்மஞானத்தின் இலக்கணமெனக் கொள்வோமாயின், சமயமானது நம்மிடையே அதீதமாயிராமல், மிகக் குறைவாகவே இருந்ததென்பதும், அதுவுங்கூட விரிவான போக்குடையதாயிராமல், ஒரே சுவட்டில் சென்றது என்பதும் வெளிப்படையாகும்.

## வாழ்வையெல்லாம் உண்மையான சமயமாக்குவதே இதற்குப் பரிகாரம்

நமது நிலைமைக்குச் சரியான பரிகாரம், தொன்று தொட்டுவரும் இந்திய லட்சியத்தை மேலும் குறைகூறுவதன்று; அதன் பழைய நிறைவை மீண்டும் பெறச் செய்து, அதற்கு இன்னும் விரிவான உட்கருத்தைத் தந்து உண்மையாகவே சமுதாய வாழ்வையெலாம் இந்த உயரிய ஆத்மீக அருத்தத்தில் ஒரு சமயமாக ஆக்குவதேயாகும். மேல்நாட்டுத் தத்துவமும், கவிதையும், கலையும், இவ்வழியை நோக்கியே (இன்னும் தெளிவாக இல்லாமற் போனாலும்) மேன்மேலும் பெருகிவரும் ஒளியுடன் செல்ல ஆரம்பித்திருக்கின்றன. அதன் ராஜீய சமூக



3590

லட்சியங்களில் இவ்வுண்மையின் சில மங்கலான சிற்றொளி களும் வீசிக்கொண்டிருக்கின்றன.

### பாரத அன்னையிடமே பிரச்னையைத் தீர்க்கும் திறவுகோல் உளது

பாரத அன்னையே இவ்வறிவின் திறவுகோலையும் இந்த லட்சியத்தை அறிவுடன் பிரயோகிக்கும் ஆற்றலையும் பெற்றிருக்கிறாள். இந்த லட்சியத்தின் பிரயோகத்தை அவள் முன்னர் சரியாக அறியவில்லை. ஆனால், இப்போது அதைப் புது ஒளியுடன் விளக்கக்கூடிய நிலைமையிலிருக்கி றாள். தன் பழைய முறைகளில் தவறாயும் கோணலா யும் இருந்ததை அவள் இப்போது சீர்திருத்திக் கொள்ளக் கூடும். தனது அத்தியாத்ம லட்சியத்தின் புற வளர்ச்சி யைப் பாதுகாக்கச் சிருஷ்டித்துக் கொண்ட வேலிகளே பின்னர் அதன் விரிவான வளர்ச்சிக்கும் இதர பிரயோகங் களுக்கும் தடையாய்விட்டன. அவைகளை இப்போது உடைத்தெறிந்து, தனது சீவன் தாராளமாக இயங்கவும் மேல் நிலை யடையவும் போதுமான சந்தர்ப்பங்களை யளிக் கக்கூடும். அவள் விரும்பினால், மக்களனைவரும் எப் பிரச்னைகளைக் குறித்துப் பெரிதும் முயன்றும் இடறி விழுந் தும் வருகின்றனரோ, அவைகளுக்கு ஒரு புதிய, நிச்சய மான, போக்கைக் கொடுக்க முடியும்; ஏனெனில் அவை களைத் தீர்க்கக்கூடிய ரகசியம் அவளுடைய பண்டை ஞானத்திலுள்ளது. இப்போது தான் அடைந்து வரும் மறுமலர்ச்சியினால் கிடைக்கும் வசதியை அவள் பூரண மாக உபயோகப்படுத்திக் கொள்வாளா இல்லையா என் பதே அவளுடைய வருங்கால விதியைக் குறித்தொரு கேள்வியாகும்.

---

3590

# மணி மலர்த் திரட்டு

•

மகா மகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், கா. சுப்பிரமணிய பிள்ளை, வித்துவான் டி. பி. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, பண்டித, ந. மு. வேங்கடசாமி நாட்டார், ச. க. கோவிந்தசாமி பிள்ளை, ஞானம்பாள் அம்மையார், ராவ்பகதூர் கோ. ம. இராமச்சந்திரன் செட்டியார், அ. மு. சரவண முதலியார், வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர் முதலியோர் எழுதிய பன்னிரண்டு உயர்ந்த கட்டுரைகள் அடங்கியது

விலை ரூபா 1—8—0
(தபால் செலவு தனி)

•

தமிழ் நிலயம்
புதுக்கோட்டை

Printed by SHAKTI PRESS Ltd., (Shanti Press) Madras